DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

Siva & Joy Real Estate Team
416-267-9700
Siva Shanmuganathan Broker
Homelife/Future Reality Inc., Brokerage
Joy H. Selvanayagam Broker

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள் பாலா லோகன் 647-447-1562
Bala Logendralingam
RE/MAX

25வது ஆண்டை நோக்கி
Towards 25th Year in Publishing
www.uthayannews.ca
UTHAYAN உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
$1.00
Tel : 416-752-1524
Fax: 416-752-6703

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tel : 647-344-6600

KANAGAAMBIKAI PAWN BROKERS
2613 Eglinton Ave, East, Scarborough, ON M1K 2S2, Canada
416 269 7198

MORTGAGE மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

உதயம் 1274 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday September 4, 2020

# காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளுக்கு தோள் கொடுக்கும் ஒரு நீண்ட நடைப் போராட்டம்

## கனடாவின் தலைநகர் ஒட்டாவா நோக்கிய வலிகள் நிறைந்த பயணம் 4ம் திகதி வெள்ளிக்கிழமையன்று 6வது நாளாக அமைகின்றது







எமது தாயகத்தில் வடக்கு மற்றும் கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் நீண்ட நாள் போராட்டங்களுக்கும் அவர்களின் வலிகள் நீங்கிட தோள் கொடுக்கும் வகையிலும் தற்போது கனடாவில் ஒரு நீண்ட நடைப் போராட்டம் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றது.

நான்கு நடைப்போராளிகள் உணர்வுள்ளவர்கள் சூழ்ந்து வர உற்சாகமாகப் பயணிக்கின்றார்கள், அவர்கள் பாதங்கள் மட்டுமல் உடலெங்கும் உ-பாதைகள் வறுத்தி நிற்க.

கனடாவின் தலைநகர் ஒட்டாவா நோக்கிய வலிகள் நிறைந்த பயணம் வெள்ளிக்கிழமையன்று 6வது நாளாக அமைகின்றது

சாதனையொன்றை நிலை நாட்டுவதற்கான நீண்ட நடைப் பயணம் அல்ல இது....

வேதனையால் கதறும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளுக்கு தோள் கொடுக்கும் ஒரு போராட்டம்..

கனடாவை வாழ்விடமாகக் கொண்ட நடைப் போராளிகள் நால்வர் திருவாளர்கள் மகாஜெயம், யோகேந்திரன், டேவிற் தோமஸ் மற்றும் விஜிதரன் ஆகியோர் இணைந்து ஏற்ற ஒரு சத்தியப் பணயம்.

நேற்று வியாழக்கிழமை இரவுப் பொழுதில் இந்த நடைப்போராளிகள் தங்கள் முழுதான தூரத்தின் கிட்டத்தட்ட அரைவாசிப் பகுதியை கடந்து விடுவார்கள் என்ற நம்பிக்கையோடு அவர்களை தொடர்ச்சியாக வாழ்த்துவதோடு, அவர்கள் உடற்சோர்வின்றி தங்கள் உன்னத நோக்கத்தை நிறைவு செய்ய வேண்டும் என்பதற்காகவும் பிரார்த்தனைகளும் இடம் பெற்றன.

இன்று வெள்ளிக்கிழமை அவர்கள் பயணிக்கும் பெருந்தெரு 9 ல் அவர்களின் சரியான இடத்தை கூகுள் வரைபடம் மூலம் அறிந்து கொணடு அங்கு சென்று நடைப் போராளிகளின் சத்தியத்தை அடிப்படையாகக் கொண்ட இந்த பயணத்திற்கு உற்சாகமூட்டி உணர்வையும் பகிர்ந்து கொள்வதற்காய் அதிகளவில் கூடவுள்ளார்கள் என்று அறியப்படுகின்றது. இங்கு காணப்படும் படங்களில் நடைப் பயணத்தின் போது இணைந்து தங்கள் ஆதரவை வழங்கிய பாராளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி மற்றும் ஊடக நிறுவனங்களின் அதிபர்கள் மற்றும் பிரதம ஆசிரியர்கள் ஆகியோர் நடைப்போராளிகளுக்கு உற்சாகமூட்டும் வகையில் அவர்களோடு சேர்ந்து நிற்கின்றார்கள்.

MONEY PROBLEMS?
உங்கள் அனைத்து கடன்களுக்குரிய கட்டணங்களை ஒரே சிறிய கட்டணமாக் எவ்வித வட்டியுமின்றிச் செலுத்த எம்மை நாடுங்கள்.
Direct Tamil Line (416) 489-2000 Visit GtaCredit.Com
North York * Scarborough * Mississauga * Brampton * Ajax

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East Mississauga, ON, L5A 1W7 905 272 1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1 905 794 4404

ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
✓ Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

உங்கள் இல்லங்கள் அல்லது பண்ணை வீடுகள் ஆகியவற்றில் அழகிய முறையில் திருத்த வேலைகளைச் செய்து கொள்ள எம்மை அழையுங்கள்
Interior: Staircase Refinishing/Installation - Flooring Refinishing /Installation
Bathroom/Kitchen/Basement Renovations Additions & Extensions
Exterior : Fence/Interlock/Deck.
ZY-Renovation Call: Ethan @ 647 995 5955

# MORTGAGE SOLUTIONS

## $50,000 EQUITY LOAN

GET APPROVED WITHIN 24 HOURS

416.298.2777

$375 Mo.

www.mortgageSolutions.ca

MONTHLY SAVING $2,478

SAVE UPTO 75% REFINANCE



KIRUBA THANABALASINGHAM

Mortgage Agent Lic# M12002440

Ultimate Mortgage Group Lic 11995

info@mortgageSolutions.ca

Off: 416.298.2777

Dir: 416.894.9122

| | | Before | After |
|---|---|---|---|
| Mortgage Payment | $320,000 @ 2.90% | $1,498.02 | - |
| Auto Loan | $21,000 @ 7.50% | $764.25 | $0.00 |
| Line of Credit - 1 | $16,000 @ 6.50% | $566.67 | $0.00 |
| Line of Credit -2 | $12,500 @ 7.00% | $447.92 | $0.00 |
| Credit Card -1 | $ 8,800 @12.00% | $352.00 | $0.00 |
| Credt Card - 2 | $ 5,200 @ 19.00% | $238.34 | $0.00 |
| Store Card | $ 3,000 @ 24.00% | $150.00 | $0.00 |
| New Mortgage | $386,500 @ 2.39% | | $1,563.00 |
| Total Debt | | $ 386,500.00 | $ 386,500.00 |
| Total Payment | | $4,014.20 | $1,563.00 |

## MARKHAM & STEELES - BLUE BUILDING

B105 - 3341 Markham Road, Toronto, ON M1X 0A5

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Suganthy, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

உதயன் கதிரோட்டம்

# இலங்கையில் 19வதை மறைத்து விட்டு 20வது தோன்றுகின்றதாம்

இலங்கையில் புதிய அரசாங்கம் பதவிக்கு வந்ததைத் தொடர்ந்து பெரும் பேசு பொருளாகியுள்ள அரசியலமைப்புக்கான 20வது திருத்தம் தொடர்பான சட்ட வரைவுக்கு அமைச்சரவை நேற்று முன்தினம் அங்கீகாரம் வழங்கியுள்ளது. இத்திருத்தச் சட்டமூலமானது அரசியலமைப்புக்கான 19வது திருத்தச் சட்டத்தைத் திருத்தியமைக்கும் வகையில் அமைகின்றது என்று சொல்லப்பட்டாலும அரசாங்கத்தினதும் அரசாங்கத்தில் முக்கிய பங்குவகிக்கும் அமைச்சர்கள், பேச்சாளர்கள் மற்றும் கட்சிக்காரர் பலரை அவதானிக்கும் போது, இந்த புதிய திருத்தச் சட்டத்தால் தமிழர்களும் தமிழ்த் தலைவர்களும் எதிர்பார்க்கும் தீர்வு வந்து விடாது என்பதே உறுதி என்பதை கொழும்பில் உள்ள பல தமிழ் பேசும் பத்தி எழுத்தாளர்கள் எழுதத் தொடங்கிவிட்டார்கள்.

ஐ.தே.க. தலைமையிலான கடந்த அரசாங்கம் பதவிக்கு வந்ததும் அரசியலமைப்புக்கான 19வது திருத்தத்தை அவசர அவசரமாக பாராளுமன்றத்திற்கு கொண்டு வந்து நிறைவேற்றியது.

ஆனாலும் அந்த திருத்தமானது தமிழ் மக்களுக்கு எந்தவிதமான தீர்வையும் தந்துவிடவில்லை. ஆனாலும் தமிழ் மக்களை பிரதிநிதிதுவம் செய்த பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரின் பொருளாதார பலத்தை தூக்கி நிறுத்தியது என்றே சொல்லலாம்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையின் அதிகாரங்களைக் குறைப்பதற்கான நடவடிக்கையாகக் கூறிக் கொண்டு வரப்பட்ட இத்திருத்தத்தின் ஊடாக ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் முறுகல் நிலைகள் தோற்றம் பெற்று நீடித்து வந்தது.

இவ்வாறு சூழலில் 2019 நவம்பரில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் ஸ்ரீல.பொ. பெரமுன சார்பில் போட்டியிட்ட ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, 19வது திருத்தத்தின் ஊடாக நாட்டில் ஏற்பட்டுள்ள பலவீனங்களையும் வீழ்ச்சிகளையும் திருத்தியமைத்து தேசிய பாதுகாப்பையும் நாட்டையும் பாதுகாப்பதாக மக்களுக்கு வாக்குறுதி வழங்கினார். அதற்கேற்ப மக்கள் அவருக்கு பெரும்பான்மை ஆதரவு நல்கி ஜனாதிபதியாகத் தெரிவு செய்துள்ளனர். ஆனாலும் தமிழ் மக்களது எதிர்பார்ப்புக்கள் மற்றும் அரசியல் அபிலாசைகள் ஆகியன தீர்ந்துவிடும் என்ற நம்பிக்கையே இல்லாமல் போய்விட்டது.

சிங்களத்தையும் பௌத்தத்தையும் முழுத் தேசத்திலும் நிலை நிறுத்துவதே அனைவரதும் போக்காகவும் 'வெறி'யாகவும் உள்ளது. ஆகவே பாராளுமன்றம் என்னும் கூடாரம், சிங்களத்திற்கும் பௌத்தத்திற்கும் உரியதாகவே மாறப்போகின்றது.

இறுதியில் என்ன நடக்கப்போகின்றது என்பதை ஓரளவு ஊகிக்கக் கூடியதாக உள்ளது. பாராளுமன்ற உறுப்பினராகிவிட்ட விக்கினேஸ்வரன் ஐயாவும் கஜேந்திரகுமாரும் பாராளுமன்றத்தில் எமது பிரச்சனைகளை ஓயாது பேசி நிற்பதும், அதற்கு தீர்வோ அன்றி விடிவோ கிட்டாமல் நாட்கள் கழிந்து செல்ல, தமிழர்கள் மீண்டும் மீண்டும் மொழியின் அடிப்படையிலும் இனத்தின் அடிப்படையிலும் கொடுமையான பாதிப்புக்களை சந்திப்பார்களா என்ற கேள்வியைக் கூட மிகுந்த பதட்டத்துடன் இங்கே பதிவு செய்கின்றோம்.

## GHURUS TOWING

Forklift / Machinery move
Local / Long Distance Towing
Recovery Specialist
Flatbed Service
Lockout Specialist
Booster service
Flat Tire

We pay scrap up to $1000



NIRMALAN (ROGER):
(416) 990-7777
(416) 984-7777

## BASEMENT வாடகைக்கு உண்டு

Kennedy & Eglinton சந்திப்புக்கு அருகில் basement ஒன்று உடனடியாக வாடகைக்கு உண்டு.
2 புதிய bedrooms / 2 washrooms
Hall and separate entrance.
2 minutes walking distance to Kennedy station. All necessary facilities are also within walking distance.

மேலதிக விபரங்களக்கு:
647-501-2720

## வேலைக்கு ஆட்கள் தேவை

பகுதிநேரமாக வேலைசெய்வதற்கு ஆட்கள் தேவை.

சம்பளம்: $16 /hour

Call
(416) 520-4746

## SPOKEN ENGLISH

100% உத்தரவாதம்!
ஆங்கிலம் எதுவும் கதைக்கமுடியாதவர்கள் 2 மாதத்தில் சரளமாக பேச முடியும்
Letter writing, Essay writing, Citizenship exam preparation மற்றும் IELTS preparation.
நம்பிக்கையுடன் அழையுங்கள்

துஸ்யந்தி:
(647) 606-1009

## பராமரிப்பாளர் தேவை

பிரம்ரன் நகரில் உள்ள வீடொன்றில் 81 வயதுடைய பெண்மணியை, வீட்டில் தங்கியிருந்து பராமரிக்க ஒரு பெண் உடனடியாகத் தேவை. அழைக்க விரும்புவோர், சுகதேகியாகவும் சுறுசுறுப்பாக வேலைகளைச் செய்யக் கூடியவராகவும் இருத்தல் அவசியம். தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

Call: (647) 546-1646

## வேலைக்கு ஆட்கள் தேவை

கிளினிங் (Cleaning) வேலைக்கு ஆட்கள் உடனடியாகத் தேவை.

ஸ்காபுறோ, Toronto Down Town, மற்றும் நோர்த் யோர்க் ஆகிய நகரங்களில் உள்ள இடங்களில் கிளினிங் வேலைகளுக்கு உடனடியாக ஆட்கள் தேவை. ஆண், பெண் இருபாலாரும் அழைக்கலாம். முழு நேர வேலை.

சிவா: (416) 206-1395
(647) 864-3016

## சுவையான LUMP PUTTU & LUMP RICE

சனி ஞாயிறு ஆகிய தினங்களில் Morningside & Sheppard சந்திப்புக்கு அருகில் நீங்கள் விரும்பும் சுவையான Lump Puttu மற்றும் Lump Rice ஆகியன கிடைக்கும்.
Take Out and Catering சேவைகளும் உண்டு.

Call:
(416) 832-6345

## BASEMENT வாடகைக்கு உண்டு

Morningside & Sheppard சந்திப்புக்கு அருகில் உள்ள வீடொன்றில் சமையல் அறை வசதிகளுடன் Basement உடனடியாக வாடகைக்கு உண்டு

Call:
(416) 832-6345

# நீதியரசர் 'விக்கி' ஐயாவிற்கு எதிராக பெரும்பான்மை இனத்தின் சட்டத்தரணி ஒருவர் பொலிஸ் முறைப்பாடு



தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கு மாறு பெரும்பான்மை இன சட்டத்தரணி தர்சன வெரதுவேஜ் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

சமூகங்களிடையே இன அல்லது மத வெறுப்பைத் தூண்டும் வகையில் ஊடகங்களுக்கு அறிக்கைகளை வழங்கியதற்காக விக்னேஸ்வரன் மீது அவர் முறைப்பாடு செய்துள்ளார். கடந்த ஓகஸ்ட் 30 ஆம் திகதி இரண்டு தனியார் தொலைக்காட்சிகள் ஒளிபரப்பிய நிகழ்ச்சிகளின் மூலம் விக்னேஸ்வரன் மோசமான கருத்துக்களை வெளியிட்டதாக தர்'ன வெரதுவேஜ் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் அமைப்பு ஒரு பயங்கரவாத அமைப்பல்ல என்று விக்னேஸ்வரன் கூறியதாக அந்த முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். ஓய்வுபெற்ற நீதியரசரான விக்னேஸ்வரன் இலங்கை இராணுவத்திற்கு எதிராக ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை சுமத்தியதாகவும், வடமாகாணத்தில் புத்தர் சிலைகள் தன்னிச்சையாக நிறுவப்படுவதாகக் கூறி ஒரு அறிக்கையை வெளியிட்டதாகவும் முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார்.

சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கை (ஐ.சி.சி.பி.ஆர்) சட்டம் எண் 3 (1) இன் கீழ், 2007 இன் 56, பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் பிரிவு 2 (1) (எச்) மற்றும் தண்டனைச் சட்டத்தின் 120 மற்றும் 290 (பி) பிரிவுகளின் கீழ் விக்கினேஸ்வரன் தண்டனைக்குரிய குற்றங்களை செய்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

விக்னேஸ்வரனுக்கு எதிராக உடனடியாக விசாரணையைத் தொடங்குமாறும், கடவுச்சீட்டை பறிமுதல் செய்ய நடவடிக்கை எடுக்கும்படியும் முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார்.

# MONEY PROBLEMS?
## பணச்சிக்கலா?

ALL DEBT SOLUTIONS CCR PLAN

**0% வட்டி**

**அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்**

No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills



வசந்தி சிவராஜா

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

### நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

### நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.

நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.

தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.




**தமிழில் தொடர்புகளுக்கு:**

**வசந்தி சிவராஜா - 416-616-3077**

**எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்**

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

**416-671-0577**

**4 இடங்களில் சேவை**

றொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோண்ட்கில், மிசிசாகா வார இறுதி - இரவு நேரங்களிலும் சேவை உண்டு

**MISSISSAUGA OFFICE**
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

**SCAROBOROUGH OFFICE**
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

**HEAD OFFICE - TORONTO**
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

**RICHMONDHILL OFFICE**
10255 Yonge St. Suite # 204
Richmondhill

**NORTH YORK OFFICE**
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York



# காப்புறுதித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் காப்புறுதி ஆலோசகர்களாவதற்கும் ஒரு நம்பிக்கையான நிறுவனம்

# FREE CLASSES
**To Become RESP & INSURANCE ADVISORS**

MEDICAL INSURANCE FOR SUPER VISA 100% REFUND IF VISA DENIED

LIFE • CRITICAL ILLNESS • HEALTH & DENTAL • MORTGAGE INSURANCE
• GROUP BENEFITS • RRSP • RESP
• DISABILITY INSURANCE • LONG TERM CARE



## Sritharan Thurairajah
Chartered Life Underwriter, Certified Health Insurance Specialist

Direct: **416.918.9771**
Business: **416.321.2500**

MDRT Member of Million Dollar Round Table

Life 100 INSURANCE & INVESTMENTS INC.

10 Milner Business Court, Suite 208, Scarborough, ON M1B 3C6
Web: www.life100.ca, E-mail: info@life100.ca

La Capitale | IA INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC. | Assumption Life | BMO Insurance

**Are you getting Million Dollar advice?**

- digi Media -

# கட்டுப்பாடுகளைத் தளர்த்துவது பேரழிவுகளகொண்டுவருமென்கிறது உலக சுகாதார அமைப்பு



கொரோனா வைரஸ் பரவல் காலத்தில் சமூகத்தில் விரைவாக அனைத்துக் கட்டுப்பாடுகளையும் தளர்த்துவது என்பது கொரோனா மூலம் நடக்கும் பேரழிவுக்கு வழிகாட்டுவதாக அமைந்துவிடும் என்று உலக சுகாதார அமைப்பின் இயக்குனர் டெட்ராஸ் அதானம் கெப்ரியேசஸ் எச்சரிக்கை விடுத்துள்ளார். உலகையே அச்சுறுத்திவரும் கரோனா வைரஸால் இதுவரை உலக அளவில் 2.53 கோடி பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 84.80 லட்சம் பேர் உயிரிழந்தனர். கொரோனாவுக்குத் தடுப்பு மருந்து கண்டுபிடிக்கும் பணியில் பல்வேறு நிறுவனங்கள் ஈடுபட்டுள்ளன, தடுப்பு மருந்துகளும் பல்வேறு சோதனைக் கட்டங்களில் இருக்கின்றன. ஆனால், கொரோனா லாக்டவுனால் பலநாடுகள் பொருளாதாரச் சீரழிவையும், பாதிப்பையும் தாங்க முடியாமல் கட்டுப்பாடுகளைத் தளர்த்தி, முன்னெச்சரிக்கை நடவடிக்கையுடன் இயல்பு வாழ்க்கைக்கு அனுமதித்து வருகின்றன. பெரும்பாலான நாடுகளில் மக்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பிவிட்டனர். இந்தச் சூழலில் உலக சுகாதார அமைப்பின் இயக்குனர் டெட்ராஸ் அதானன் கெப்ரியேசஸ் நேற்று ஜெனிவாவில் ஊடகங்களுக்குப் பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

“சமூகத்தில் அனைத்துக் கட்டுப்பாடுகளையும் நாடுகள் விரைவாகத் தளர்த்தி மக்களை இயல்பு வாழ்க்கைக்கு அனுமதித்து வருகின்றன. அதேபோல, கொரோனா வைரஸ் பரவலையும் கட்டுப்படுத்துவது அவசியம். ஆனால், ஒருபுறம் கட்டுப்பாடுகளைத் தளர்த்தி மக்களை இயல்பு வாழ்க்கை வாழ அனுமதித்துவிட்டு, மறுபுறம் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துகிறேன் என்று கூறினால், இரண்டுக்கும் சமநிலையை உண்டாக்க முடியாது. சமூகத்தில் கட்டுப்பாடுகளைத் தளர்த்தி மக்களைச் சுதந்திரமாகச் செல்ல அனுமதிப்பது, கொரோனா மூலம் வரும் பேரழிவுக்கு வழிகாட்டுவதற்கு இணையாகும்.

4 முக்கிய அம்சங்களை நாடுகள் முக்கியமாகப் பின்பற்ற வேண்டும். முதலாவதாக, சமூகங்களும், தனி நபர்களும், மொத்தமாகக் கூடும் நிகழ்ச்சிகளைத் தடுக்க வேண்டும், அங்குதான் வைரஸ் திரள் உருவாகும். இரண்டாவது, கொரோனாவில் எளிதாகப் பாதிக்கப்படக்கூடிய பிரிவினரை, வயதினரைப் பாதுகாக்க வேண்டும். மூன்றாவது, மக்கள் ஒவ்வொருவரும் சுயமாகத் தங்களைத் தாங்களே பாதுகாக்கும் வழிமுறைகளை அறிந்து பாதுகாத்துக் கொள்ள வேண்டும். நான்காவது, கொரோனா நோயாளிகளைக் கண்டுபிடிப்பது, தனிமைப்படுத்துவது, பரிசோதனை செய்வது, கவனிப்பது போன்றவற்றைச் செய்ய வேண்டும். அவர்களுடன் தொடர்பில் இருந்தவர்களையும் தனிமைப்படுத்த வேண்டும்.

இவற்றைப் பின்பற்றுவது அவசியமாகும். உலக சுகாதார அமைப்பு சமீபத்தில் பல்வேறு நாடுகளில் நடத்திய ஆய்வில் 90 சதவீதம் நாடுகள், கரோனா வைரஸ் காரணமாக, மற்ற சுகாதாரச் சேவைகளை நிறுத்திவிட்டன. குறிப்பாக குழந்தைகளுக்கு தடுப்பூசி போடுதல், ஊட்டச்சத்து மருந்துகள் அளித்தல் உள்ளிட்டவற்றை ஒத்திவைத்துள்ளன. 105 நாடுகளில் நடத்தப்பட்ட ஆய்வில் 90 சதவீதம் நாடுகளில் குறிப்பாக குறைந்த, நடுத்தர வருமானம் உள்ள நாடுகளில் இந்த நிலைதான் நீடிக்கிறது. 25 சதவீதத்துக்கும் மேலான நாடுகள், கொரோனாவால் அவசரப் பணிகளுக்காகன பிற மருத்துவ சேவைகளை நிறுத்தி வைத்திருப்பதாகத் தெரிவித்துள்ளன. பல்வேறு நாடுகளிலும் கொரோனா வைரஸ் என்னவிதமான வேறுபாடுகள் கொண்ட பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது என்பதை நாடுகள் புரிந்துகொண்டு எச்சரிக்கையாக இருக்க வேண்டும்”. இவ்வாறு டெட்ராஸ் அதானம் தெரிவித்தார்.

# புதிய அரசியலமைப்பு உருவாக்கத்திற்கான நிபுணர் குழுவில் இரு தமிழ்பேசும் உறுப்பினர்கள்!



புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்கான நிபுணர் குழு அமைச்சரவையினால் நியமிக்கப்பட்டுள்ள நிலையில் அதில் சிறுபான்மையினர் தரப்பில் இரு நிபுணர்கள் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

குறித்த குழுவிற்கான நிபுணர்களை நியமிப்பது தொடர்பாக நேற்று (புதன்கிழமை) இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தது. இதன்போது, குறித்த குழுவில் தமிழ் - முஸ்லிம் மக்களின் உணர்வுகளையும் அபிலாசைகளையும் பிரதிபலிக்கும் வகையில் நிபுணர்கள் உள்வாங்கப்பட வேண்டும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் வலியுறுத்தப்பட்டது.

இந்நிலையில், அமைக்கப்பட்டுள்ள நிபுணர் குழுவில் கலாநிதி ஏ.சர்வேஸ்வரன் மற்றும் பேராசிரியை நஜீமா கமுறுடீன் ஆகியோர் அடங்கிய 9 பேர் அடங்கிய நிபுணர் குழு அமைக்கப்பட்டுள்ளது.

குறித்த குழுவினர் இலங்கையில் வாழுகின்ற பல்லின சமூகங்களினதும் அபிலாசைகளையும் காலாசார பண்பாடுகளையும் கருத்திலெடுத்து நாட்டின் ஆரோக்கியமான எதிர்காலத்திற்கு உகந்த அரசியலமைப்பை உருவாக்கவுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# யாழ்ப்பாணம், நாவாந்துறை பகுதியில் நடத்தப்பெற்ற சுற்றிவளைப்பு தேடுதலின் போது 14 பேர் கைது

யாழ்ப்பாணம், நாவாந்துறை பகுதியில் இராணுவத்தினரும் பொலிசாரும் இணைந்து நேற்று முன்தினம் புதன் காலை நடத்திய சுற்றிவளைப்பு தேடுதலின் போது 14 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும், யானை தந்தம், வாள், ஹெரோயின் ஆகியன கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

யாழ்ப்பாணம், நாவாந்துறைப் பகுதியில் நேற்று காலை திடீரென இராணுவத்தினரும் பொலிசாரும் இணைந்து பாரிய சுற்றிவளைப்பு தேடுதல் ஒன்றை மேற்கொண்டிருந்தனர். இந்த சுற்றிவளைப்பு தேடுதலின் போது சந்தேகத்தின் பேரில் 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் ஹெரோயின் போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் யானை தந்தம் ஒன்றை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவரும் கூரிய வாள் ஒன்றை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவருமாக நேற்றைய சுற்றிவளைப்பில் மொத்தமாக 14 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதுடன் கைது செய்யப்பட்டவர்களிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

# கைவிரல் அடையாளம் தொடர்பாக வவுனியா வைத்தியசாலை சிற்றூழியர்கள் போராட்டத்தில்



வவுனியா வைத்தியசாலை சிற்றூழியர்களால் ஆர்ப்பாட்டமும், பணிபுறக்கணிப்பும் நேற்று முன்தினம் புதன்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

வைத்தியசாலை வளாகத்தில் காலை 9 மணிக்கு முன்னெடுக்கப்பட்ட குறித்த போராட்டம் காலை 10 மணிவரை இடம்பெற்றது. ஆர்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கருத்து தெரிவித்த போது,

“தமது பணி நடவடிக்கைகளிற்கு இடையூறு ஏற்பட்டுத்தும் வகையில் கைவிரல் அடையாள நடைமுறை கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் அதனை தவிர்த்து பழையமுறையின்படியே தாங்கள் கையொப்பம் இடுவதற்கான செயற்பாட்டை தொடர வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டதுடன், தமது கோரிக்கை நிறைவேறாவிடில் போராட்டங்கள் தொடரும் என்றும் எச்சரிந்திருந்தனர்”.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் அரச சட்டங்கள் அனைவருக்கும் சமன், எமக்கு மட்டும் ஏன் இந்த அநீதி, மன அமைதியுடன் பணிசெய்ய விடு போன்ற வாசகங்கள் எழுதிய பதாதைகளை ஏந்தியிருந்தனர்.

# தலைவர் நீதியரசர் விக்னேஸ்வரனைக் கைது செய்ய கோருகிறது நவ சிங்கள ராவய!



புலிகளின் பிரிவினைவாத நிகழ்ச்சி நிரலை முன்னெடுக்கும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் விக்னேஸ்வரனை உடனடியாக கைது செய்ய வேண்டும் என்று நவ சிங்கள ராவய அமைப்பின் பொதுச்செயலாளர் மாகல்கந்தே சுதந்த தேரர் கோரிக்கை விடுத்துள்ளார்.

“அரசியல் இலாபத்துக்காக இனவாதத்தை தூண்டும் நடவடிக்கையில் விக்னேஸ்வரன் ஈடுபட்டுள்ளார். அவரின் இந்த முயற்சியை தோற்கடிப்பதற்கு அனைத்து மக்களும் ஓரணியில் திரளவேண்டும்.

அதுமட்டுமல்ல விக்னேஸ்வரனை உடனடியாக கைது செய்து வாக்குமூலம் பதிவுசெய்ய வேண்டும். நாடாளுமன்றத்துக்குள் மட்டுமல்ல வெளியிலும் அவர் சர்ச்சைக்குரிய கருத்துக்களை வெளியிடுகின்றார்.

புலிகளின் பிரிவினைவாத முகமையே அவர் பிரதிநிதித்துவப்படுத்துகிறார். அவரின் அறிவிப்புக்களை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்” என அவர் மேலும் கூறியுள்ளார்.

இலங்கை செய்திகள்

# பண்டாரவன்னியன் சிலை படிக்கட்டு அமைக்க வீதி திருத்த நிதியே பயன்படுத்துப்பட்டது என்கிறது வவுனியா நகரசபை



வவுனியா நகரசபைக்குட்பட்ட 6ஆம் வட்டாரத்தில் வீதி திருத்தத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதியிலேயே பண்டாரவன்னியன் சிலைக்கான படிக்கட்டுகள் அமைக்கப்பட்டதாக வவுனியா நகரசபை தெரிவித்துள்ளது.

வவுனியா மாவட்ட செயலகத்திற்கு முன்பாக கம்பீரமாக காணப்பட்ட பண்டாரவன்னியனின் சிலைக்கு வருடத்தில் ஒருதடவை நினைவுதினத்தில் மாலை போடுவதற்கு வசதியாக மூன்று இலட்சத்து எழுபத்தி ஐயாயிரம் ரூபாய் (375,000) பெறுமதியில் படிக்கட்டு அமைக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில், குறித்த படிக்கட்டு அமைக்கப்பட்டமை மற்றும் நிதி விடயங்களைக் கோரி தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் ஊடாக தகவல் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

இதற்கமைய, நகரசபையால் வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையில் கடந்த பெப்ரவரி 20ஆம் திகதி நடைபெற்ற சபைக் கூட்டத்தின் தீர்மானத்திற்கு அமைவாக ஆறாம் வட்டாரத்திற்கு 45 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு வேலைத்திட்டம் பிரிக்கப்பட்டதாகவும் அதில் சிறைச்சாலை வீதியூடாகச் சென்று சந்தை உள்வட்ட வீதிக்கு செல்லும் வீதியை புனரமைப்புச் செய்வதற்கு ஒதுக்கப்பட்ட ஐந்து இலட்சத்து அறுபத்து ஐயாயிரம் ரூபாவியில் இரண்டு இலட்சத்து நாற்பத்தி ஐயாயிரம் ரூபாய் குறித்த வட்டார உறுப்பினரின் முன்மொழிவுடன் ஏகமனதாக பண்டாரவன்னியன் சிலைக்கு படிக்கட்டு அமைப்பதற்கு மாற்றப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், ஆறாம் வட்டாரத்தில் பல அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ள நிலையில் வருடத்தில் ஒருதடவை பயன்படுத்துவதற்காக அபிவிருத்திக்கு வந்த நிதியை மாற்றி படிக்கட்டுகள் அமைக்கும் நடவடிக்கையில் வட்டார உறுப்பினர் ஈடுபட்டமை தொடர்பாக பலரும் விசனம் தெரிவித்துள்ளனர்.

# இலங்கையில் காணாமல் போனவர்கள் வெளிநாடுகளில் என்பதை மறுக்கிறார் யஸ்மின் சூக்கா



இலங்கையில் காணாமல்போனவர்களில் அரைவாசிப்பேர் வெளிநாடுகளில் வசித்து வருகின்றார்கள் என்று ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல வெளியிட்டுள்ள கருத்து ஆதாரமற்றது என்றும், இது குறித்து அவரிடம் முறையான விளக்கம் கோரப்பட வேண்டும் என்றும், சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான செயற்திட்டத்தின் பணிப்பாளர் யஸ்மின் சூக்கா, தெரிவித்துள்ளார்.

ஏழாயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று தமது குடும்பத்தினருடன் தொடர்புகொள்வது பற்றி கவலைகொள்ளாமல் இருப்பது எப்படி சாத்தியம் என்றும் கேள்வி எழுப்பியிருக்கிறார்.

இடைக்கால நீதிப்பொறிமுறை ஒன்று இருப்பதாக நம்பும் சர்வதேச சமூகம் நீதியைக்கோரும் குடும்பங்கள் தொடர்பில் ஒரு தார்மீகப்பொறுப்பைக் கொண்டிருக்கிறது. புதிய அரசாங்கத்திற்கான தமது ஆதரவை வெளிப்படுத்தும் வகையில் புதிய அரசியல்வாதிகளுடனும் ஜெனரல்களுடனும் கைகுலுக்குவதற்காக வரிசையில் நிற்பதற்குப் பதிலாக, காணாமல்போனவர்களின் குடும்பங்கள் மற்றும் அவர்களது துணிச்சல்மிக்க சட்டவாளர்களின் கோரிக்கைகளைப் பாதுகாப்பதற்காக கொழும்பிலுள்ள இராஜதந்திரிகள் தொடர்ச்சியான ஆதரவினை வெளிக்காட்டுவதற்கு முன்வரவேண்டும் என்றும் அவர் மேலும் வலியுறுத்தியிருக்கிறார்.

மேலும், இலங்கையில் காணாமல்போனோர் பற்றிய உண்மைகளைக் கண்டறிவதற்கான தேடலில் ஈடுபட்டமைக்காக இளம் தமிழ் செயற்பாட்டாளர்கள் கடத்தப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டு, பாலியல் வன்புணர்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளார்கள். இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களில் குறைந்தபட்சம் 15 பேருக்கு கடந்த 2015 ஆம் ஆண்டிலிருந்து ஐக்கிய இராச்சியத்தில் அகதி அந்தஸ்த்து வழங்கப்பட்டிருக்கிறது.

"போர் முடிவடைந்த பின்னர் ஒரு தசாப்த காலத்திற்கும் மேலாக தமது உடன்பிறப்புக்கள் காணாமற்போனமை தொடர்பான உண்மைகள் வெளிப்படுத்தப்பட வேண்டும் என்று கோரியவர்கள், அதற்காக மிகப்பயங்கரமான விலையைக் கொடுத்திருக்கிறார்கள்" என்று சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான செயற்திட்டத்தின் பணிப்பாளர் யஸ்மின் சூக்கா தெரிவித்திருக்கிறார்.

"தமது அன்பிற்குரியவர்களுக்கு என்ன நடந்தது என்பதை மாத்திரம் அறிய விரும்பியவர்களை தொடர்ந்தும் வெள்ளை வேனை அனுப்பித் துன்புறுத்த முடியாது என்பதை இலங்கை அரசாங்கத்திற்கு நினைவுபடுத்த விரும்புகின்றோம்" என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

# நீதியரசர் விக்னேஸ்வரனுக்கு எதிரான விமர்சனங்கள் அனைத்தும் அரசியல் அராஜகம் என்கிறார் ஸ்ரீகாந்தா

சி. வி. விக்னேஸ்வரன் மீதான விமர்சனங்கள் இனவெறிச் சிந்தனையை வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றன என தமிழ் தேசியக் கட்சியின் தலைவர் சிரேஸ்ட சட்டத்தரணி என். ஸ்ரீகாந்தா தெரிவித்துள்ளார்.



"தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் யாழ்ப்பாணப் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி. விக்கினேஸ்வரன் நிகழ்த்திய நாடாளுமன்ற உரைகள் கடந்த சில நாட்களாக பாரிய சர்ச்சையின் மையப்பொருளாக சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரால் உருமாற்றப்பட்டுள்ளன.

விக்னேஸ்வரனுக்கு எதிராக நாடாளுமன்றத்திற்குள்ளே, ஆளும் மற்றும் எதிர்க்கட்சி என்ற நிலையான வேறுபாடுகளைக் கடந்து உக்கிரத்தோடு தொடுக்கப்பட்டிருக்கும் கண்டனக் கணைகள் அனைத்தும், நாடாளுமன்ற ஜனநாயகத்தில் காலங்காலமாக கடைப்பிடிக்கப்பட்டு வந்திருக்கும் அடிப்படை மரபுகளை அப்பட்டமாக மீறுவதாகவும் இனவெறிச் சிந்தனையை வெளிச்சம் போட்டுக் காட்டுவதாகவும் அமைந்திருக்கின்றன.

இத்தனைக்கும் விக்னேஸ்வரன் புதிதாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் ஒரு உறுப்பினர் மாத்திரமின்றி, அவர் தெரிவித்த கருத்துக்கள் எதிலும் இனத்துவேசம் என்பது துளியளவுகூட இருந்திருக்கவில்லை.

மாறாக, தன்னைத் தெரிவுசெய்த மக்கள் சார்ந்த இனத்தின் வரலாற்றுத் தொன்மையையும், அதன் தாய் மொழியின் பெருமையையும் நாகரீகத்தோடு கூடிய வார்த்தைகளில் அவர் நாசூக்காக வெளிப்படுத்தியிருந்தார். அது அவரது உரிமையும் கடமையுமாகும்.

இருந்தும், ஆளும் கட்சி, எதிர்கட்சி என்ற வேறுபாடு இன்றி மிரட்டலும் சண்டித்தனமும் நிறைந்த தொனியில், இந்த இரண்டு தரப்பிலிருந்தும் ஆத்திரத்தை வெளிப்படுத்தும் பேச்சுக்கள் இடம்பெறுகின்றன என்றால், இவையனைத்தும் தமிழ் மக்களுக்கும் அவர்களால் தெரிவுசெய்யப்பட்டிருக்கும் பிரதிநிதிகளுக்கும் ஒரு அரசியல் செய்தியை திட்டவட்டமாக சொல்லிவைக்க முயன்றிருக்கின்றன என்பதில் சந்தேகம் இருக்கமுடியாது.

தமிழர் தரப்பிலிருந்து தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் எவராவது, வரலாற்றைச் சுட்டிக்காட்டி சுய நிர்ணய உரிமை பற்றியெல்லாம் பேச முயன்றால், அவற்றை சகித்துக்கொள்ள இயலாது எனவும் அப்படிப்பட்டவர்கள் நாடாளுமன்றத்தில் இருக்கமுடியாது என்பதுடன் அவர்களின் நடவடிக்கைகளுக்கு அவர்களைத் தெரிவுசெய்த மக்களும் விலைகொடுக்க வேண்டியிருக்கும் என்ற தோரணையில் ஓர் அரசியல் அராஜகமே அரங்கேற்றப்பட்டிருக்கின்றது.

இந்நிலையில், தனியொரு உறுப்பினராக இருந்தாலும் கட்சியொன்றின் தலைவர் என்ற முறையில், நாடாளுமன்ற சம்பிரதாயங்களுக்கு இசைவாக, விக்னேஸ்வரனுக்கு ஒதுக்கப்பட்டுள்ள முன்வரிசை ஆசனத்தைக்கூட பறித்தெடுத்து, அவரை இரண்டாம் வரிசைக்குத் தள்ளிவிடுவதற்கான முஸ்தீபுகளும் முடுக்கிவிடப்பட்டிருக்கின்றன.

இந்த நாடாளுமன்றக் களேபரத்தில் முன்னணியில் நிற்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஆளுங்கட்சியைச் சேர்ந்த சரத் வீரசேகரவின் நடத்தை ஆச்சரியத்திற்கு உரியதல்ல. அவரைப் போன்ற சிங்கள தேசபக்தரிடமிருந்து வேறு எதனையும் எதிர்பார்க்க முடியாது.

அதேநேரத்தில் 2010 ஜனாதிபதி தேர்தலில் தமிழ் மக்களின் பேராதரவைப் பெற்ற முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா, தான் யார் என்பதை தமிழ் மக்களுக்கு தெட்டத்தெளிவாக ஞாபகப்படுத்தியுள்ளார்.

இந்த விவகாரத்தில், வாய் திறந்து பேசாமலே செயற்பட்டுக் கொண்டிருக்கும் மிக முக்கியமான சூத்திரதாரி எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவும் சரத் பொன்சேகாவைப் போலவே கடந்த ஜனாதிபதி தேர்தலில் தமிழ் மக்களின் பேராதரவைப் பெற்றிருந்தவர். 2010, 2019 தேர்தல்களில் இந்த இருவருக்கும் தமிழ் மக்கள் கொடுத்த பேராதரவு வெறும் செல்லாக் காசு என இப்பொழுது நிரூபிக்கப்பட்டுள்ளது.



இது, மஹிந்த ராஜபக்ஷ, கோட்டபாய ராஜபக்ஷ ஆகியோரை எதிர்த்து தமிழ் மக்கள் அளித்த எதிர்மறையான வாக்குகள் தான் சரத்பொன்சேகாவுக்கும் சஜித் பிரேமதாசாவுக்கும் கிடைத்த தோல்விகளில் கூட, மரியாதையை இணைத்திருந்தன என்பதை நினைத்துப் பார்க்கக்கூட இந்த இருவரும் இப்பொழுது தயாராக இல்லை.

இந்நிலையில், ஐக்கிய மக்கள் சக்தியில் உள்ள தமிழ் தோழர்களைச் சமாளிப்பதற்காக சால்ஜாப்பு அறிக்கை ஒன்று நாளையே வெளிவரலாம். ஆனால் உண்மை உறங்கி விடாது.

இந்த நாட்டில் நாம் எண்ணிக்கையில் சிறுபான்மையினராக இருக்கலாம். ஆயினும், நாங்கள் அரசியல் அநாதைகள் அல்ல" என அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்

# அன்னையரின் கண்ணீரைப் பிரிக்கும் அரசியல்?

அம்பாறை மாவட்டத்தில் உள்ள காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காகப் போராடும் அமைப்பு நடந்து முடிந்த தேர்தலில் அம்மாவட்டத்தில் போட்டியிட்ட கருணாவை ஆதரிப்பதில்லை என்று பகிரங்கமாக அறிவித்தது. அவ்வறிவித்தலின் பின்னணியில் தேர்தலுக்குப் பின் அண்மையில் அந்தச் சங்கத்தின் அலுவலகம் இனந்தெரியாதவர்களால் தாக்கப்பட்டது.

இதேபோல நடந்த முடிந்த தேர்தலில் வவுனியா மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான அமைப்பு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை ஆதரிப்பது என்று பகிரங்கமாக முடிவெடுத்தது. கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்த போராட்டத்தில் அந்த அமைப்பு பங்குபற்றவில்லை. பதிலாக சனிக்கிழமை வவுனியாவில் அது ஒரு எதிர்ப்பு நடவடிக்கையை ஒழுங்குபடுத்தியது.




அதேசமயம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஞாயிற்றுக் கிழமை நடக்கவிருந்த பேரணிக்கு முன்னதாக சனிக்கிழமை யாழ் நகரப் பகுதியில் அரசியல் கைதிகளுக்காக நீதி கோரி ஒரு கவனயீர்ப்பு போராட்டத்தை நடத்தியது.ஆனால் ஞாயிற்றுக் கிழமை யாழ் நகரப்பகுதியிலிருந்து நடந்த பேரணியில் அக்கட்சி பங்குபற்றவில்லை.

ஞாயிற்றுக்கிழமை நடந்த போராட்டத்தில் ஒப்பீட்டளவில் அம்பாறை மட்டகளப்பு மாவட்டங்களில் போராடும் அமைப்புக்கள் ஒற்றுமையாகத் திரண்டு தமது எதிர்ப்பைக் காட்டின. பொலிஸார் தடைகளை ஏற்படுத்திய போதிலும் அங்கு உள்ள அமைப்புகள் துணிச்சலாகத் தமது போராட்டத்தை முன்னெடுத்திருந்தன. திருகோணமையில் கடற்கரையில் ஒரு கவன ஈர்ப்பு. ஆளுனர் அலுவலகத்திற்கு முன் ஒரு கவன ஈர்ப்பு. ஒற்றுமையில்லை. வடக்கில் கிளிநொச்சியில் ஒரு சிறு ஊர்வலம் நடந்தது. அது யாழ்பாணத்தில் நடந்த ஊர்வலத்தோடு இணையவில்லை. யாழ்ப்பாணத்தில் இரண்டு ஊர்வலங்கள் நடந்தன. ஒன்று பெரியது. அது நகரத்திலிருந்து தொடங்கி கச்சேரியை சென்றடைந்தது. மற்றது ஒப்பீட்டளவில் சிறியது. அது கிட்டு பூங்காவில் இருந்து தொடங்கி ஐநா அலுவலகத்தை சென்றடைந்தது.

பெரிய ஊர்வலத்தில் பெரும்பாலான தமிழ் கட்சிகள் பங்குபற்றின. ஆனால் தமிழ் தேசிய மக்கள் முன்னணியை சேர்ந்தவர்கள் அதில் பங்கு பற்றக்கவில்லை. அதேசமயம் அக்கட்சியோடு தற்பொழுது முரண்பட்டு நிற்கும் மணிவண்ணன் அணியினர் அந்த ஊர்வலத்தில் காணப்பட்டார்கள். அதேசமயம் கிட்டு பூங்காவில் இருந்து தொடங்கிய ஊர்வலத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் காணப்பட்டார்கள். இவ்வாறு ஒரே மாவட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் அமைப்புக்கள் இரண்டாகப் பிரிந்து ஊர்வலம் நடத்த வேண்டிய நிலைமை ஏன் ஏற்பட்டது? என்று சம்பந்தப்பட்டவர்களிடம் கேட்டேன்.

யாழ்.காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத்தைச் சேர்ந்த ஒரு முதிய தாய் சொன்னார் "ஊர்வலத்துக்கு சிலநாட்கள் முன்னதாக தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் இரண்டாம் நிலை முக்கியஸ்தர் ஒருவரோடு நான் கதைத்தேன். அக்கட்சி ஞாயிற்றுக் கிழமை நடக்கவிருந்த ஊர்வலத்தில் பங்கேற்கப் போவதில்லை என்ற தொனிப்பட அவர் பதில் கூறினார்" என்று கிளிநொச்சி மாவட்டத்தை சேர்ந்த அமைப்பின் முக்கியஸ்தரான ஒரு தாய் கடந்த ஆண்டு தமது கட்சிக்கு எதிராக தெரிவித்திருந்த கடுமையான விமர்சனங்களின்ன் பின்னணியிலேயே தாங்கள் இவ்வாறு முடிவு எடுத்ததாகவும் அவர் கூறியிருக்கிறார்.

அந்த ஒரு தாய் தெரிவித்த கருத்துக்காக நீங்கள் முழுப் போராட்டத்தையும் புறக்கணிக்க வேண்டாம் என்ற தொனிப்பட அந்தத் தாய் மேற்படி கட்சி முக்கியஸ்தரிடம் வேண்டுகோள் விடுத்திருக்கிறார். எனினும் அடுத்த நாள் யாழ்ப்பாணத்தில் இரண்டு ஊர்வலங்கள் இடம்பெற்றுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து ஊர்வலத்துக்காக பாதிக்கப்பட்ட மக்களை ஏற்றிக்கொண்டு யாழ் நகரத்தை நோக்கி வந்த ஒரு பேருந்து திசை திருப்பப்பட்டு வேறு ஒரு ஊர்வலத்துக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

பூநகரியில் ஒரு பகுதியில் யாழ்ப்பாணத்தில் நடக்கவிருந்த பேரணியில் பங்குபற்றுவதற்காக காத்திருந்த மக்களை ஏற்றுக் கொண்டு வந்த ஒரு பேருந்து வேறு ஒரு ஊர்வலத்தில் அவர்களை இறக்கி விட்டிருக்கிறது.

கடந்த 30 ஆம் திகதியும் அதற்கு முன் பின்னாகவும் நடந்த காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான போராட்டங்களின் தொகுக்கப்பட்ட காட்சி இது. இது எதைக் காட்டுகிறது? காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காகப் போராடும் சங்கங்களுக்கு இடையே ஐக்கியம் இல்லை என்பதனையா? அல்லது அந்த சங்கங்கள் ஐக்கியப்பட முடியாதபடி அவை கட்சிகளால் பிரிக்கப்படுகின்றன என்பதயா? அல்லது அச்சங்கங்களைச் சேர்ந்தவர்கள் கட்சிகளுக்கு ஆதரவாகவும் எதிராகவும் எடுக்கும் நிலைப்பாடுகள் ஐக்கியப்படுவதற்குத் தடையாகக் காணப்படுகின்றனவா?

காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான போராட்டம் மட்டுமல்ல காணிக்கான போராட்டம் ˙அரசியல் கைதிகளுக்கான போராட்டம் உள்ளிட்ட எல்லா மக்கள் போராட்டங்களும் கட்சி அரசியலுக்கு வெளியே பொதுமக்கள் அமைப்புகளால் முன்னெடுக்கப்பட வேண்டும். ஆனால் அவ்வாறான பொதுமக்கள் அமைப்புகளோ அல்லது செயற்பாட்டு அமைப்புகளோ தமிழ் மக்கள் மத்தியில் இல்லாத ஒரு வெற்றிடத்தில் அல்லது அப்படிப்பட்ட அமைப்புகளால் தலைமை தாங்குவதற்கு காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான சங்கங்கள் தயாராக இல்லாத ஒரு பின்னணியில் கடந்த 11 ஆண்டுகளாக காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காண போராடங்கள் தேங்கி நிற்கின்றன. உரிய நீதியும் கிடைக்கவில்லை உரிய இழப்பீடும் கிடைக்கவில்லை.

இவ்வாறு காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காகப் போராடும் சங்கங்கள் தங்களுக்கிடையே ஐக்கியப்பட முடியாமைக்கு இரண்டு தரப்புகளின் மீது குற்றம் சாட்டப்படுகிறது. முதலாவது - கட்சிகள். கட்சிகள் அந்தத் தாய்மாரை ஒன்றிணைக்கும் சக்தியற்று காணப்படுகின்றன. அல்லது ஒன்றிணைக்க விரும்பவில்லை. அந்த தாய்மார் குறிப்பிட்ட கட்சிகளுக்கு ஆதரவாகவும் எதிராகவும் காணப்பட்டாலும் அவர்களைக் கட்சி கடந்து ஒன்றிணைக்க எந்தக் கட்சித் தலைமையாலும் இன்று வரை முடியவில்லை.

அந்த தாய்மார் அரசியல் விளக்கத்தோடு போராட முன்வரவில்லை. இழப்பின் வலியே அவர்களைப் போராடத் தூண்டுகிறது.புத்திரசோகம்தான் அவர்களுடைய போராட்டத்தின் உணர்ச்சிகரமான அடித்தளம். எனவே அவர்களுக்கு அரசியல் விளக்கத்தைக் கொடுக்க வேண்டியதும் அந்த விளக்கத்தின் அடிப்படையில் அவர்களை ஒன்றிணைக்க வேண்டியதும் கட்சிகளும் செயற்பாட்டாளர்களும்தான். அந்தத் தாய்மார் ஏதாவது பிழை செய்திருந்தால் அதைப் பிள்ளைகளின் இடத்திலிருந்து பொறுத்துக் கொள்ள வேண்டியது கட்சிகளின் கடமையாகும்.

அவர்கள் பிழை விடுகிறார்கள் என்று கூறி ஏற்கெனவே நொந்து போயிருக்கும் அந்த தாய்மாரைப் பிரித்துக் கையாளக் கூடாது. நீதிக்கான போராட்டத்தின் ஒரு பகுதியே அவர்களுடையது. நீதிக்கான போராட்டம் என்பது தமிழ் தேசியத் திரட்சியினால் மட்டுமே வெற்றி பெறும். தேசியம் எனப்படுவது ஆகப் பெரிய திரளாக்கம் என்று புறப்பட்ட கட்சிகள் பாதிக்கப்பட்ட தாய்மாரைக் கூறு போடலாமா? இது யாருக்குச் சேவகம் செய்வதில் போய் முடியும்?

இரண்டாவது காரணம்-காணாமல் ஆக்கப்கப்பட்டவர்களுக்காகப் போராடும் அமைப்புக்களைப் பின்னிருந்து ஊக்குவிக்கும் புலம்பெயர்ந்த அமைப்புக்கள் அல்லது தனி நபர்களுக்கு இடையிலான முரண்பாடுகள் இந்தச் சங்கங்களை ஐக்கியப்பட விடுவதில்லை என்பது.

இந்த இடத்தில் ஒரு உண்மையை ஒப்புக் கொள்ள வேண்டும். புலம் பெயர்ந்த தமிழர்களின் உதவியின்றி காணாமல் ஆக்கப்பட்டவர்கள் இவ்வாறு ஆயிரம் நாட்களுக்கு மேலாக போராடியிருக்க முடியாது. எந்த உதவி அவர்களைத் தளராமல் போராட வைக்கிறதோ அதே உதவிதான் அவர்களை பிரித்தும் கையாள்கிறது. குறிப்பிட்ட அமைப்புகளுக்கு உதவிபுரியும் புலம்பெயர்ந்த தரப்புகள் அந்த அமைப்புகளை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க விரும்புகின்றன.

எனவே இந்த அமைப்புகள் தங்களுக்கு இடையே ஐக்கியப்படுவதற்கு அவர்கள் தடையாக இருக்கிறார்கள் என்று அண்மை ஆண்டுகளில் இந்த அமைப்புகளை ஐக்கியப்படுத்த முயற்சித்த செயற்பாட்டாளர்களும் சிவில்அமைப்புக்களும் தெரிவிக்கின்றன.

இவ்வாறு கட்சி அரசியலுக்குள்ளும் புலம்பெயர்ந்த தரப்புகளின் உபயகாரர் மனோநிலை காரணமாக ஏற்படும் முரண்பாடுகளுக்குள்ளும் சிக்கி காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காக போராடும் அமைப்புக்கள் தங்களுக்கிடையே ஐக்கியப்பட முடியாமல் இருக்கின்றன. இந்த ஐக்கியமின்மையின் விளைவை குறிப்பாக வடக்கில் கடந்த ஞாயிற்றுக்கிழமை காணக்கூடியதாக இருந்தது.


ஒருபுறம் சிங்கள மக்களை ஆகக்கூடிய பெருந்திரள் ஆக்கி ராஜபக்சக்கள் அசுர பலத்தோடு நாடாளுமன்றத்துக்கு வந்திருக்கிறார்கள். ஆனால் இன்னொருபுறம் தோற்கடிக்கப்பட்ட மக்களும் அரசற்ற தரப்பும் நீதி கோரிப் போராடும் தரப்புமாகிய தமிழ் மக்கள் கட்சிகளாலும் உதவி புரியும் நபர்கள் மற்றும் அமைப்புக்களாலும் பிரிக்கப்படுகிறார்களா?

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் போராட்டம் மட்டுமல்ல இது போன்ற நீதி கோரும் எல்லாப் போராட்டங்களும் கட்சி சம்பந்தப்படாத அல்லது கட்சி கடந்த தேசியப் பேரியக்கம் ஒன்றினால் முன்னெடுக்கப்பட வேண்டும். சாதாரண ஜனங்கள் ஏதோ ஒரு கட்சிக்கு ஆதரவாக இருப்பார்கள். காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களும் அப்படித்தான். ஆனால் அவர்களுடைய தனிப்பட்ட கட்சிச் சாய்வுகள் அந்த சங்கங்களின் பொதுத் தன்மையை கட்சி சாரா தன்மையை சிதைக்கக் கூடாது. ஒரு கட்சிக்கு ஆதரவாக பகிரங்கமாக நிலைப்பாடு எடுப்பதும் ஒரு கட்சியை எதிர்த்து பகிரங்கமாக கருத்து தெரிவிப்பதும் நீதி கோரிப் போராடும் அமைப்புகளை பலவீனப்படுத்தும்.

கட்சிகள் மக்களை வாக்காளர்களாகவே பார்க்கும். வாக்காளர்கள் கட்சி சார்ந்து பிரிந்து நிற்பார்கள். எனவே மக்களை வாக்காளர்களாக பிரித்துப் பார்க்கும் கட்சி அரசியலுக்கு வெளியே மக்களை ஆகப்பெரிய திரட்சி ஆக்கும் மக்கள் இயக்க அரசியலை நோக்கி காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான போராட்டம் ஒருங்கிணைக்கப்பட வேண்டும். அது கட்சிச் சாய்வுகளினாலோ அல்லது வெளியில் இருந்து உதவி செய்யும் நிதி உதவியாளர்களின் நிகழ்ச்சி நிரல்களினாலோ பிரிக்கப்பட முடியாத கட்டிறுக்கமான ஐக்கியப்பட்ட போராட்டமாக மாற வேண்டும்.

இல்லையென்றால் ஒவ்வொரு கட்சியும் அல்லது உதவி புரியும் அமைப்பும் பாதிக்கப்பட்ட அன்னையரை தங்கள் தங்கள் நிலைகளிலிருந்து பிரித்துக் கையாளுவார்கள். இது ஒரு கட்டத்தில் காணாமல் ஆக்கப் பட்டவர்களுக்கான போராட்டத்தையே காணாமல் ஆக்கிவிடுமா?

# ஓவியர் மறைந்தாலும் ஓவியங்கள் மறைவதில்லை


ஓவியர் ஆசை இராசையா

இலங்கை தேசத்தின் புகழ்பெற்ற ஓவியர்களுள் ஒருவரான யாழ்ப்பாண ஓவியர் ஆசை இராசையா அவர்களுடனான எனது நினைவுகளை பதிவு செய்து அன்னாருக்கு எனது அஞ்சலியை செலுத்துகிறேன்.

2014-இல் ஊருக்கு சென்ற வேளை தான் அவருடைய அறிமுகம் கிட்டியது. ஆஸ்பத்திரி வீதியில் அமைந்திருந்த நோபெல் பிரின் ரேஸ் உரிமையாளர் அன்பர் ஸ்ரீ அவர்கள்தான் அங்கு அடிக்கடி வருகை தரும் அன்பர் ஆசை இராசையா அவர்களை அறிமுகம் செய்து வைத்தார். 2015 இல் யாழ் பல்கலைக்கழகத்தில் வெளியிடப்பட்ட எனது முத்தமிழ் நூல்களான "வாழ்த்தும் வணக்கமும்" (கவிதை) "தொலைந்து போன வசந்தகாலங்கள்" (இயல்) "கவியின் காதல்" (நாடகம்) ஆகிய நூல்களின் முகப்பு அட்டைகளுக்கு ஓவியம் வரைந்து தந்து எனக்கு மிகவும் நெருங்கிய தோழர் ஆனார். தமிழகத்தில் இருந்து வெளிவரும் வார இதழ்கள், சஞ்சிகைகளில் பிரசுரமாகும் சிறுகதைகளுக்கும் வேறு புதினங்களுக்கும் ஓவியம் வரைபவர்களை, அவர்களது தூரிகையை வடிவங்களுக்கூடாகவே அறிமுகமாகியுள்ளேன். முதன்முதலில் எமது தாயக ஓவியக் கலைஞர்களுடன் அறிமுகமாகி பழகியது புது அனுபவம். அவரது இல்லத்தின் சித்ரகூடத்தில் அவர் வரைந்த வண்ண ஓவியங்களைப் பார்த்து பிரமித்துப் போனேன். இப்படி ஒரு பிரம்மிப்பு பல வருடங்களுக்கு முன் நடிகர், ஓவியர், எழுத்தாளர், பேச்சாளர் திரு. சிவக்குமார் அவர்களது வீட்டுக் கூடத்தில் நாற்புறமும் வைக்கப்பட்டிருந்த அவரால் எழுதப்பட்டிருந்த ஓவியங்களையும், போட்டோ ஆல்பங்களையும் பார்த்துப் பார்த்து பிரமித்திருக்கிறேன் வியந்திருக்கிறேன்.

அன்பர் ஆசை இராசையா நம்ம ஆளு. நமது மண்ணின் கலைஞர். பழகுவதற்கு இனிமையானவர், பண்பும் மனிதநேயமிக்க கலைஞர். கடந்த பத்து வருடத்திற்குள் நான்கு தடவை யாழ்ப்பாணம் சென்று உள்ளேன். எனது வருகையை அறிவித்ததும், இன்று என்ன ப்ரோக்ராம், எங்கு போக வேண்டும் எனக் கேட்டு பிரத்தியேகமாக ஒரு தலை கவசத்துடன் தனது டூவீலரை கொண்டு வந்து என்னுடன் பயணிப்பார். 2019 இல் நல்லூரில் நடந்த கம்பன் விழா கவியரங்கத் தலைமை ஏற்க வந்த தமிழ் அறிஞர் கவிஞர் செரிபுதீன் (கொழும்பு) அவர்களை எனக்கு அறிமுகம் செய்து வைத்து, இலக்கிய உறவை வளர்த்தவர். எனது நூலான தொலைந்துபோன வசந்த காலங்களுக்கு யாழ். மூத்த ஊடகவியலாளர் திரு. ராதேயன் அவர்களிடமிருந்து மதிப்புரை எழுத வைத்தவர். என்னை மிகவும் நேசித்த மனிதநேய பண்பாளர் மறைவு எனக்கு பெரிய இழப்பாகும். எனக்கு மட்டுமல்ல யாழ் பல்கலைக்கழக ஓவியப் பீடத்திற்கும், ஈழத்து ஓவியக் கலைக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

அவரது உருவம் எனது மனத்திரையில் ஓவியம் ஆகவே நிலைத்துவிட்டது அவருடன் பழகிய நாட்கள் பசுமை நிறைந்தது அவர் தீட்டிய ஓவியங்களுக்கூடாக அவர் வாழ்கிறார்.

**- வீணை மைந்தன் (மொன்றியால் - கனடா)**

# கொரோனாவுக்கு தீர்வு காண இந்திய, அமெரிக்க விஞ்ஞானிகள் கொண்ட 11 குழு தயார்



கொரோனா வைரசை விரைவாக கட்டுப்படுத்தி தீர்வு காண்பதற்காக இந்தியா மற்றும் அமெரிக்க விஞ்ஞானிகள் அடங்கிய 11 குழுக்கள் விரைவில் பணிகளை தொடங்க உள்ளன.

உலகை அச்சுறுத்தி வரும் கொரோனா வைரசை கட்டுப்படுத்த மருத்துவத் துறையினர் போராடி வருகின்றனர். வைரஸ் பரவுவதை தடுக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுடன் கொரோனா தடுப்பு மருந்து மற்றும் தடுப்பூசி தயாரிப்பு பணிகளும் முடுக்கி விடப்பட்டுள்ளன.

அவ்வகையில், கொரோனா வைரசை விரைவாக கட்டுப்படுத்தி தீர்வுகள் காண்பதற்காக இந்தியா மற்றும் அமெரிக்க விஞ்ஞானிகள் அடங்கிய 11 குழுக்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. இந்த குழுவினர் விரைவில் இணைந்து பணிகளை தொடங்க உள்ளனர்.

இதுகுறித்து மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், 'இந்திய மற்றும் அமெரிக்க விஞ்ஞானிகள் கொண்ட 11 குழுக்கள் இணைந்து விரைவில் கொரோனா தடுப்பு பணிகளை தொடங்க உள்ளன. ஆரம்பகால நோயறிதல் சோதனைகள், வைரஸ் தடுப்பு சிகிச்சை, மருந்து மறுபயன்பாடு, வென்டிலேட்டர் ஆராய்ச்சி, கிருமிநாசினி இயந்திரங்கள் மற்றும் கொரோனாவுக்கான சென்சார் அடிப்படையிலான அறிகுறியை கண்காணித்தல் போன்ற பணிகளை மேற்கொள்ள உள்ளனர்.

அமெரிக்கஇந்தியா அறிவியல் மற்றும் தொழில்நுட்ப எண்டோவ்மென்ட் ஃபண்ட் (யு.எஸ்.ஐ.எஸ்.டி.இ.எஃப்) கடந்த ஏப்ரல் மாதம் வெளியிட்ட மானியங்களின் கீழ் பெறப்பட்ட முன்மொழிவுகளின் அடிப்படையில் இந்த குழுக்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன' என கூறப்பட்டுள்ளது.

கொரோனா சவாலை எதிர்கொள்ளும் வகையில் புதுமையான யோசனைகளை முன்வைக்கும் 11 இருதரப்பு குழுக்களுக்கு யு.எஸ்.ஐ.எஸ்.டி.இ.எஃப் விருதுகளை அறிவித்திருப்பதாகவும் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம் கூறி உள்ளது.

அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி புதுமையான கண்டுபிடிப்பு மற்றும் தொழில்முனைவோருக்கு வழிவகுக்கும் கூட்டு நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்காக இந்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை மற்றும் அமெரிக்காவின் வெறியுறவுத்துறை இணைந்து யு.எஸ்.ஐ.எஸ்.டி.இ.எஃப் அமைப்பு நிறுவப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# கொரோனா அதிவேகமாக பரவும் நாடுகளில் இந்தியா தொடர்ந்து முன்னிலை



உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் உறுதி செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 2 கோடியே 61 லட்சத்தை கடந்தது. சீனாவில் ஹூபேய் மாகாணம் வுகான் நகரில் கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் கொரோனா வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த வைரஸ் தற்போது உலகின் 213 நாடுகள்\ பிரதேசங்களுக்கு பரவி பெரும் மனித பேரழிவை ஏற்படுத்தி வருகிறது.

இந்த வைரசுக்கு தடுப்பு மருந்து கண்டுபிடிக்கும் முயற்சி இறுதி கட்டத்தை எட்டியுள்ளது. ஆனாலும் கொரோனாவின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே செல்கிறது. இந்நிலையில், உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் பரவியவர்களின் எண்ணிக்கை 2 கோடியே 61 லட்சத்து 69 ஆயிரமாக அதிகரித்துள்ளது. குறிப்பாக இந்தியா, அமெரிக்கா, பிரேசிலில் கொரோனா வேகமெடுத்துள்ளது. இந்திய அரசு நேற்று வெளியிட்ட தகவலில் 24 மணி நேரத்தில் 78 ஆயிரத்து 357 பேருக்கு புதிதாக தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. கடந்த 24 மணி நேரத்தில் பிரேசிலில் 48 ஆயிரத்து 632 பேருக்கும், அமெரிக்காவில் 40 ஆயிரத்து 899 பேருக்கும் புதிதாக கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதன் மூலம் தற்போதைய நிலவரப்படி, உலகம் முழுவதும் 2 கோடியே 61 லட்சத்து 69 ஆயிரத்து 212 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

வைரஸ் பாதிப்பு உறுதி செய்யப்பட்டவர்களில் 68 லட்சத்து 72 ஆயிரத்து 247 பேர் சிகிச்சை பெற்று வருகிறார்கள். சிகிச்சை பெறுபவர்களில் 60 ஆயிரத்து 705 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. வைரஸ் பாதிப்பில் இருந்து 1 கோடியே 80 லட்சத்துக்கும் அதிகமானோர் குணமடைந்துள்ளனர். ஆனாலும், கொரோனாவால் இதுவரை 8 லட்சத்து 65 ஆயிரத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர். கொரோனா அதிகம் பரவிய நாடுகள்: அமெரிக்கா 62,90,425 பிரேசில் 40,01,422 இந்தியா 37,69,524 ரஷியா 10,05,000 பெரு 6,63,437 கொலம்பியா 6,33,339 தென் ஆப்பிரிக்கா 6,30,595 மெக்சிகோ 6,06,036 ஸ்பெயின் 4,79,554 அர்ஜெண்டினா 4,39,172

# இந்தியாவில் கொரோனா மொத்த உயிரிழப்பில் 5 மாநிலங்களில் மட்டும் 70 சதவீதம்

கொரோனா பாதிப்பு நிலவரம் தொடர்பான புள்ளிவிவரங்களை மத்திய சுகாதாரத்துறை செயலாளர் ராஜேஷ் பூஷண் இன்று வெளியிட்டார். இந்தியாவில் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 38 லட்சத்தை கடந்துள்ளது. இன்று காலை நிலவரப்படி கொரோனா பாதிப்பு 38,53,407 ஆக உயர்ந்துள்ளது. கொரோனா வைரசால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 67376 ஆக உயர்ந்துள்ளது. கொரோனா பாதிப்பில் இருந்து குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 29,70,492 ஆக உயர்ந்துள்ளது. நேற்று மட்டும் 68584 பேர் குணமடைந்துள்ளனர். நாடு முழுவதிலும் உள்ள பல்வேறு மருத்துவமனைகளில் 8,15,538 பேர் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

இந்நிலையில் கொரோனா பாதிப்பு நிலவரம் தொடர்பான புள்ளிவிவரங்களை மத்திய சுகாதாரத்துறை செயலாளர் ராஜேஷ் பூஷண் இன்று வெளியிட்டார். அவர் கூறியதாவது: நாட்டில் கொரோனாவால் பாதிக்கப்பட்டு உயிரிழ்ந்தவர்களில் 70 சதவீதம் பேர், ஆந்திரா, டெல்லி, கர்நாடகா, தமிழ்நாடு மற்றும் மகாராஷ்டிராவைச் சேர்ந்தவர்கள் ஆவர். தற்போது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களில் 62 சதவிதம்பேர் தமிழ்நாடு, உத்தர பிரதேசம், கர்நாடகா, ஆந்திர பிரதேசம் மற்றும் மகாராஷ்டிரா ஆகிய 5 மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

ஆந்திராவில் சிகிச்சை பெறுவோரின் எண்ணிக்கையில் வாரந்தோறும் 13.7 சதவீதம் குறைந்துள்ளது. கர்நாடகாவில் 16.1 சதவீதமும், மகாராஷ்டிராவில் 6.8 சதவீதமும், தமிழ்நாட்டில் 23.9 சதவீதமும், உத்தர பிரதேசத்தில் 17.1 சதவீதமும் குறைந்துள்ளது. கடந்த 24 மணி நேரத்தில் மட்டும் 11 லட்சத்துக்கும் அதிகமான கொரோனா பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 29.70 லட்சத்திற்கும் அதிகமானோர் கொரோனா பாதிப்பில் இருந்து மீண்டுள்ளனர். இது தற்போது சிகிச்சையில் உள்ளவர்களை விட 3.5 மடங்கு அதிகம் ஆகும். இதுவரை இல்லாத அளவில் அதிகபட்சமாக நேற்று மட்டும் 68,584 பேர் குணமடைந்துள்ளனர். இவ்வாறு அவர் கூறினார்.

# பொருளாதாரத்தை மோசமாக நிர்வகிப்பதில் ட்ரம்ப்புக்கு அடுத்த இடத்தில் மோடி : ப.சிதம்பரம் விமர்சனம்

நடப்பு நிதியாண்டின் முதல் காலாண்டில் ஏற்பட்டுள்ள மோசமான பொருளாதாரச் சரிவிலிருந்து நாடு மீண்டுவர பல மாதங்களாகும். பொருளாதார வீழ்ச்சி வரப்போகிறது என பலமுறை எச்சரித்தோம். ஆனால், மத்திய அரசு புறந்தள்ளிவிட்டது என்று காங்கிரஸ் மூத்த தலைவரும், முன்னாள் நிதியமைச்சருமான ப.சிதம்பரம் வேதனை தெரிவித்துள்ளார்.

நடப்பு நிதியாண்டின் முதல் காலாண்டுக்கான (ஏப்ரல் ஜூன்) பொருளாதார அறிக்கையை தேசிய புள்ளியியல் அலுவலகம் நேற்று வெளியிட்டது. அதில் இதுவரை இல்லாத வகையில் நாட்டின் பொருளாதாரம் 23.9 சதவீதம் வீழ்ச்சி அடைந்திருந்தது. வேளாண் துறையைத் தவிர அனைத்துத் துறைகளும் மோசமான சரிவைச் சந்தித்து இருந்தன.

நாட்டில் ஏற்கெனவே நுகர்வோரிடம் வாங்கும் சக்தி குறைவாக இருந்தது. அதனால் சந்தையில் தேவை குறைந்தது. முதலீட்டுக் குறைவு போன்றவை இருந்த நேரத்தில் கரோனாவால் கொண்டுவரப்பட்ட லாக்டவுன் நடவடிக்கை பொருளாதாரத்தைப் பாதாளத்தில் தள்ளிவிட்டது. இதுகுறித்து காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவரும், முன்னாள் நிதியமைச்சருமான ப.சிதம்பரம் ட்விட்டரில் பதிவிட்ட கருத்தில் கூறியிருப்பதாவது:

''இந்தப் பொருளாதார வீழ்ச்சி எதிர்பார்த்ததுதான். காங்கிரஸ் கட்சி பலமுறை பொருளாதாரச் சரிவு குறித்து எச்சரித்து, தடுப்பு நடவடிக்கைகளையும், மாற்று நடவடிக்கைகளையும் எடுங்கள் என மத்திய அரசை வலியுறுத்தினோம்.

ஆனால், எங்கள் கோரிக்கைகள் அனைத்தும் கேட்காத காதில்தான் சொல்லப்பட்டன. ஒட்டுமொத்த தேசமும் இப்போது பொருளாதார வீழ்ச்சியால் பெரிய விலை கொடுக்கிறது. ஏழைகளும், பாதிக்கப்பட்டவர்களும் விரக்தியில் உள்ளனர். மோடி அரசால் மட்டும்தான் இவ்வாறு அசட்டையாகவும், கவனக்குறைவோடும் இருக்க முடியும். போலியான கதைகளை மக்களிடம் மத்திய அரசு கூறி வந்தது. ஆனால், அந்தக் கதைகள் அனைத்தும் மத்திய புள்ளியியல் அலுவலகத்தின் அறிக்கை மூலம் வெளிச்சத்துக்கு வந்துவிட்டது.

நான் வேதனையுடன் சொல்கிறேன், இந்த வீழ்ச்சியிலிருந்து பொருளாதாரம் மீண்டு வந்து சாதகமான வளர்ச்சி நிலையை எட்டுவதற்குப் பல மாதங்கள் தேவைப்படும். அரசாங்கத்தின் செயலற்ற தன்மையும் திறமையற்ற தன்மையும் எங்களுக்கு எந்த நம்பிக்கையையும் அளிக்காது. குகையின் கடைசியில் எப்படியாவது நாம் விரைவில் ஒளியைக் காண்போம்.

நடப்பு நிதியாண்டின் முதல் காலாண்டில் ஜிடிபி 23.9 சதவீதம் வீழ்ச்சிஅடைந்துள்ளது. இதன் அர்த்தம் என்னவென்றால், 2019ம் ஆண்டு ஜூன் 30 வரையிலான ஒரு காலாண்டின் ஒட்டுமொத்த உற்பத்தியும் அடித்துச் செல்லப்பட்டுவிட்டது. அதாவது, 201920 ஆம் நிதியாண்டின் வளர்ச்சியில் 20 சதவீதம் வீழ்ச்சியடைந்துள்ளது. வேளாண்துறை, காடு வளர்ப்பு, மீன்பிடித்தொழில் மட்டுமே 3.4 சதவீதம் வளர்ச்சி அடைந்துள்ளது. கடவுள்தான் பொருளாதார வீழ்ச்சிக்குக் காரணம் என்று கூறியவர்கள், கடவுளால் ஆசிர்வதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நன்றியுடன் இருக்க வேண்டும். பொருளாதாரத்தின் ஒவ்வொரு துறையும் வீழ்ச்சி அடைந்துள்ளது. சில துறைகள் ஆழ்ந்த சரிவைச் சந்தித்துள்ளன. இது எங்களுக்கு வியப்பைத் தரவில்லை. இந்தச் செய்தி வேண்டுமானால் மத்திய அரசுக்கு வியப்பாக இருக்கலாம், அவர்கள்தான் முதல் காலாண்டில் ஏதாவது பசுமை தெரிகிறதா எனப் பல நாட்களாக எதிர்பார்த்தார்கள்.

உகந்த, சரியான நிதி மற்றும் மக்கள் நலன் சார்ந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் வீழ்ச்சியைத் தவிர்த்திருக்க முடியும். ஆனால், எதுவும் செய்யாத மத்திய அரசுக்கு இவை வெட்கக்கேடான விஷயமாக இருக்க வேண்டும், ஆனால் மோடி அரசாங்கம் எந்த வெட்கமும்படாது. தவறுகளையும் அவர்கள் ஒப்புக் கொள்ள மாட்டார்கள் என்பதை நாங்கள் அறிவோம்,

இந்தியப் பொருளாதாரத்தை மிகவும் உன்னிப்பாகக் கவனித்தவர்கள் வீழ்ச்சி பற்றி முன்பே தெரிவித்தார்கள். சமீபத்தில் ரிசர்வ் வங்கி கூட தனது ஆண்டு அறிக்கையில் பொருளாதார வீழ்ச்சி பற்றிக் குறிப்பிட்டது. உலகின் மிகப்பெரிய பொருளாதார நிபுணர்கள்கூட, அமெரிக்காவின் பொருளாதாரம் தவிர்த்து இந்தியாவின் பொருளாதாரம் உலகின் வேறு எந்த நாட்டையும் விட மோசமான வீழ்ச்சியைச் சந்திக்கும் என்றனர். இதன் மூலம் எங்களுக்கு என்ன சொல்ல வருகிறது என்றால், பொருளாதாரத்தை மோசமாக நிர்வகிப்பதில் அமெரிக்க அதிபர் ட்ரம்ப்புக்கு அடுத்த இடத்தில் மோடி இருக்கிறார்''. இவ்வாறு ப.சிதம்பரம் தெரிவித்துள்ளார்.

# தமிழ்நாடு திருநெல்வேலிக்கு இன்று 230 வயது

"திருநெல்வேலி" என கம்பீரமாகவும், "நெல்லை" என செல்லமாகவும் அழைக்கப்படும் இம்மாவட்டம், பரந்து விரிந்து இருந்த மாவட்டமாகும். 2 ஆயிரம் ஆண்டு பழமை வாய்ந்த இந்த பூமிக்கு வணிகம் செய்ய வந்த பிரிட்டீ' கிழக்கிந்திய கம்பெனியார், 1790 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 1 ஆம் தேதி "திருநெல்வேலி ஜில்லா"வை உருவாக்கினர். (ஜில்லா என்பது, அன்றைய வடமொழி ஆதிக்கத்தின் அடையாளம். பின்பு "மாவட்டம்" என்ற இனிய தமிழ்ச்சொல் நிலை பெற்றது).

அன்றைய தினத்தில் திருநெல்வேலி மாவட்டத்துடன் இன்றைய தூத்துக்குடி, (இளைய) தென்காசி மாவட்டங்களும், விருதுநகர், ராமநாதபுரம் மாவட்டங்களின் சில பகுதிகளும் இணைந்து இருந்தன. காலப்போக்கில் விருதுநகரும், ராமநாதபுரமும் பிரிந்து, புதிய மாவட்டங்களாக உருவாயின. பின்பு, தூத்துக்குடியும் தனியாகப் பிரிக்கப்பட்டு, வ உ சிதம்பரனார் மாவட்டமாக உதயமானது.

திருநெல்வேலிக்கு "திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம்" எனப் பெயரிடப்பட்டது. 1997-ம் ஆண்டு, மாநில அளவில் உருவாக்கப்பட்ட சர்ச்சைகளின் காரண-



மாக, மாவட்டங்களில் இருந்து தலைவர்களின் பெயர்கள் விடைபெற்றன. சமீபத்தில் திருநெல்வேலியில் இருந்து தென்காசி பிரிக்கப்பட்டு, தனி மாவட்டமாக இயங்கி வருகிறது. என்னதான் தனித்தனி மாவட்டங்களாகி விட்டாலும், தூத்துக்குடியும், தென்காசியும் இன்னும் நெல்லையின் சகோதர மாவட்டங்களாகவே பின்னிப்பிணைந்துள்ளன.

திருநெல்வேலி என்றதும், உலகின் எந்த மூலையில் இருப்போருக்கும் நினைவுக்கு வருபவை, திருநெல்வேலி அல்வாவும், தாமிரபரணி ஆறும் தான். திருநெல்வேலியின் அடையாளங்களாக இவையிரண்டும் காலங்காலமாக நிலைத்திருக்கின்றன.

வேணுவனம், திருநெல்வேலியான கதை

வயல்வெளிகள் நிரம்பிய திருநெல்வேலியின் பண்டைய பெயர் "வேணுவனம்" என்றும், கொட்டித்தீர்த்த மழை வெள்ளத்தில் அடித்துச்செல்லப்படாமல் "நெல்லுக்கு வேலியிட்டு நெல்லையப்பர் (இறைவன்) காத்ததால் நெல்வேலி என்று பெயர் பெற்று, அதுவே பின்பு "திருநெல்வேலி" என நிலைத்திற்று" என்றும் பெயர்க்காரணம் வழங்கப்படுகிறது.

நெல்லையின் பிரதான அடையாளம், நெல்லையப்பர்-காந்திமதியம்மன் ஆலயம்.



ஆனி மாதந்தோறும் நடைபெறும் நெல்லையப்பர் கோவில் தேரோட்டம் சிறப்பு வாய்ந்தது. தமிழகத்தில் ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள், திருவாரூர் தியாகராஜர் தேர்களுக்கு அடுத்து 3-வது பெரிய தேர், நெல்லையப்பர் தேராகும்.

500 ஆண்டுகளுக்கு மேல் ஓடிய இத்தேர், இவ்வாண்டு கொரோனா பரவலால் ஓடாதது, நெல்லை மக்களுக்கு வருத்தம் தந்த நிகழ்வாகிப்போனது.

தமிழர்களால் "திருநெல்வேலி" என அழுத்தந்திருத்தமாகவும் , ஆங்கிலேயர்களால் "தின்னெவேலி" (வுஜஏேநுஏநுடுடுலு) என்றும் அழைக்கப்படும் இந்நகரம் தமிழகத்தின் ஐந்தாவது பெரிய நகரமாகும். தலைநகர் சென்னையில் இருந்து 625 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது.

திருநெல்வேலிக்கு எத்தனையோ பெருமைகள் இருந்தாலும் அத்தனை பெருமைகளுக்கும் காரணம், தாய்ப்பால் ஊட்டும் தாய்க்கு நிகராக, தாகம் தீர்க்கும் "தாமிரபரணித்தாய்" தான். பொதிகை மலையில் பிறந்து நெல்லை, தூத்துக்குடி மாட்டங்களை செழிக்க வைப்பது மட்டுமல்ல் என்றோ பிரிந்து அண்டை மாவட்டமாகி விட்ட விருதுநகர் மாவட்டத்தின் பல்வேறு பகுதி மக்களின் தாகம் தீர்ப்பதும் தாமிரபரணித்தண்ணீர் தான். தாகம் தணிப்பது மட்டுமா் சுவையிலும் அதற்கு நிகர் வேறேதும் கிடையாது.

திருநெல்வேலி அல்வாவின் அலாதி சுவைக்கும் தாமிரபரணித்தண்ணீரே காரணமாகும்.

இருட்டுக்கடை அல்வா

உலகத்தில் எத்தனையோ வகை அல்வா இருக்கலாம். ஆனால் திருநெல்வேலி அல்வா எல்லாவற்றையும் தூக்கிச் சாப்பிட்டு விடும்.

திருநெல்வேலி நகருக்குள் எத்தனையோ அல்வா கடைகள் இருக்கின்றன..

ஆனால் நெல்லையப்பர் கோவில் எதிரில் இருக்கும் "இருட்டுக்கடை அல்வா"வுக்கு இருக்கும் மவுசு வேறு எதற்கும் இல்லை. அந்த கடையில் நூறு கிராம் அல்வாவை வாங்கி நெல்லையப்பர் கோவில் கோபுரத்தை பார்த்துக்கொண்டே சாப்பிடுவதில் ஒரு தனி இன்பத்தை அனுபவிக்கலாம்.

"நெல்லைத்தமிழ்' தமிழகத்தில் பல வட்டார வழக்குகள் வழக்கத்தில் இருக்கின்றன. மதுரை, கோவை, சென்னை, தஞ்சை, குமரி என்று பல பகுதி மக்களால் வித்தியாசமான உச்சரிப்புகளில் அவை பேசப்படுகின்றன. இவற்றுக்கு மத்தியில், நெல்லை, தூத்துக்குடி வட்டார பகுதிகளில் வழங்கும் "நெல்லைத்தமிழ்' தனித்துவம் வாய்ந்தது. அண்ணாச்சி, ஏலே, மக்கா, போன்ற சொற்கள் நெல்லைத் தமிழை முல்லைத் தமிழாக்குகின்றன. ஒரு திருநெல்வேலிக்காரர் வெளியூரில் போய் சாதாரணமாகப்பேசினாலே போதும். அவர் பேச்சை வைத்தே திருநெல்வேலிக்கார்ர் என்று கண்டுபிடித்து விடமுடியும். "தென்னகத்து ஆக்ஸ்போர்டு"

(தொடர்ச்சி 17ம் பக்கம்)



# ஈழத் தமிழர்களுக்கு அன்று ஷெல்லடி இன்று சொல்லடி

- சிவா பரமேஸ்வரன் - மூத்த செய்தியாளர்

இலங்கை நாடாளுமன்றத்தில் சி.வி.விக்னேஸ்வரன் "இலங்கையின் முதல் பூர்வகுடிகள் தமிழர்கள்" என்று பேசியதற்கு எதிராக சரத் பொன்சேகா எச்சரிக்கும் தொனியில் அளித்த பதில் அரசியல் அரங்கில் பெரும் விவாதப் பொருளாகியுள்ளது. விக்னேஸ்வரனின் உரைக்கு எதிராக நாடாளுமன்றத்தில் பேசிய முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா வெளியிட்ட கருத்து தமிழ் மக்களையும் அச்சுறுத்தி அவரையும் சிறுமைப்படுத்தும் வகையிலுள்ளது.



"தேசியம் சுயநிர்ணயம் பேசி இளைஞர்களைத் தவறாக வழி நடத்திய அமிர்தலிங்கம், பிரபாகரன் ஆகியோருக்கு நடந்தது என்ன என்பதை விக்னேஸ்வரன் நினைத்துப் பார்க்க வேண்டும். சிங்கள மக்களைக் குறைத்து மதிப்பிட வேண்டாம். இதே தவறை அவர் தொடர்ந்து செய்தால் மோசமான விளைவுகளைச் சந்திக்க நேரிடும்" என்று இராணுவ பாணியில் எச்சரிக்கை விடுத்தார் சரத் பொன்சேகா. அவரது கடும்போக்கான இந்தக் கருத்து வள்ளுவரின் "தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே நாவினால் சுட்ட வடு" என்பதை நினைவுபடுத்துகிறது. சரத் பொன்சேகா போன்றோர் தனக்கு உடல் ரீதியான தீங்கை விளைவிப்பதற்கான அச்சுறுத்தல் விடுத்துள்ளதாக விக்னேஸ்வரன் அச்சம் வெளியிட்டுள்ளார்.

போர் காலத்தில் ஷெல்லடி மூலம் தமிழ் மக்களைச் சொல்லொணாத் துன்பத்துக்கு அவர் ஆளாக்கியிருந்தாலும் 2010 ஜனாதிபதி தேர்தலில் பிரதான தமிழ்க் கட்சியான தமிழத் தேசியக் கூட்டமைப்பு அவரை ஆதரித்ததிருந்தது அக்கட்சி விடுத்த வேண்டுகோளின் படி வடக்கு-கிழக்குப் பகுதி தமிழர்கள் போர் காயங்களை மறந்து அவரை ஆதரித்தனர். அதன் விளைவாகவே அவர் படுதோல்வியிலிருந்து தன்னப் பாதுகாத்துக் கொள்ள முடிந்தது.

அந்தத் தேர்தலுக்கு முன்னர் அவரை ஹயுத்த வெற்றி நாயகன்ஹ என்று புகழ்ந்த சிங்கள மக்கள் தேர்தலில் அவருக்கு மரண அடி கொடுத்தனர். அப்போது அவரை அந்த அடியிலிருந்து கௌரவமாகக் காப்பாற்றியவர்கள் போரினால் அழிவையும் அவலங்களையும் சந்தித்த தமிழர்களே. தமிழர்களின் ஆதரவைச் சிறிதும் நன்றியுடன் நினைத்துப் பார்க்காத சரத் பொன்சேகா இன்று தமிழ்ச் சமூகத்தையே அச்சுறுத்தும் வகையில் கருத்து வெளியிட்டுள்ளது தமிழர்களை மிகவும் புண்படுத்தியுள்ளது. ஆனந்தசங்கரி சீற்றம் தமிழ் மக்களை அச்சுறுத்திய சரத் பொன்சேகா மற்றும் விக்னேஸ்வரனின் கருத்துக்கள் இரண்டையுமே கடுமையாக சாடியுள்ளார் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவரும் மூத்த அரசியல்வாதியுமான வீ.ஆனந்தசங்கரி.




"சரத் பொன்சேகாவுக்கு வாக்களிக்கக் கோரிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் வாக்களித்த தமிழ் மக்களும் வெட்கித் தலை குனிய வேண்டும்" என்று ஆனந்தசங்கரி தனது கருத்தைப் பதிவு செய்துள்ளார். நாடாளுமன்றத்தில் சரத் பொன்சேகாவின் உரையைக் கூர்ந்து கவனிக்கும் போது அது அவரது ஒப்புதல் வாக்குமூலம் போலவே உள்ளது என்கிறார் ஆனந்தசங்கரி. அதாவது விடுதலைப் புலிகளை முற்று முழுதாக அழித்தவர் சரத் பொன்சேகாவே என்பது அவரது உரையிலிருந்து வெளிப்படையாகத் தெரியும் உண்மையாகும். அப்படியிருக்கும் நிலையில் "ஜனாதிபதி தேர்தலில் அவர் போட்டியிட்ட போது இது கூட்டமைப்புக்குத் தெரியாதா, அல்லது தெரிந்தும் அவருக்கு வாக்களிகச் சொன்னார்களா"? என்று கேள்வி எழுப்பியுள்ளார் ஆனந்தசங்கரி.

"இலங்கையில் தமிழர்கள் மூத்த பூர்வகுடிகள். நவீன தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியில் 5 வயது சிறுவனுக்கும் இந்த உண்மை தெரியும். விக்னேஸ்வரன் நாடாளுமன்றத்தில் பேசித்தான் இதனை நிரூபிக்க வேண்டியதில்லை. இதை நாடாளுமன்றத்தில் பேசியுள்ளதால் புதிய வடிவில் பிரச்சினை கிளம்பியுள்ளது. தமிழ் மக்களுக்கு எவ்வளவோ பிரச்சினைகள் உண்டு. இதை நிரூபிக்கவா? தமிழ் மக்கள் விக்னேஸ்வரனை நாடாளுமன்றத்துக்கு அனுப்பினர்" என்று விக்னேஸ்வரனையும் குட்டியுள்ளார் ஆனந்தசங்கரி.

சரத் பொன்சேகாவும் சஜித் பிரேமதாஸவும் ஜனாதிபதி தேர்தல்களில் தமிழர்களின் வாக்குகளினால் தான் கௌரவமான தோல்வியைப் பெற்றதாக தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் ஸ்ரீகாந்தா கூறியுள்ளார். "அவர்களுக்கு தமிழர்கள் அளித்த வாக்குகளும் பேராதரவும் செல்லாக் காசு என்பது இப்போது நிரூபிக்கப்பட்டுள்ளது" என்றும் தனது ஆதங்கத்தை அவர் வெளிப்படுத்தியுள்ளார்.




தமிழர்கள் எதிர்ப்பே தமது அரசியல் என்று செயல்படும் தென்னிலங்கை பௌத்த சிங்கள கடும்போக்கு வாதிகளான சரத் வீரசேகர, விமல் வீரவன்ச, உதயன் கம்மன்பில் போன்றோர் எந்தத் தேர்தலிலும் தமிழர்களின் வாக்குகளை எதிர்பார்த்து தேர்தலில் போட்டியிடவில்லை. ஆனால் ஜனாதிபதித் தேர்தலில் சிறுபான்மை மக்களின் வாக்குகளை எதிர்பார்த்துப் போட்டியிட்ட சரத் பொன்சேகாவின் தமிழர் எதிர்ப்பு கருத்தும் எச்சரிக்கும் பாணியிலான அச்சுறுத்தலும் பல கேள்விகளை எழுப்பியுள்ளது.



மௌனம் காக்கும் த.தே.கூ இந்த விவகாரத்தில் அவரது கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவும் மற்றும் அவரை அப்போது ஆதரித்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் வாய் திறக்காமல் இருப்பது தமிழ் மக்களை அலட்சியம் செய்வதாகவே கருத வேண்டியுள்ளது. சரத் பொன்சேகாவுக்கு கூட்டமைப்பு தமது கண்டனத்தைத் தெரிவிக்காதது ஏன்? என்ற கேள்வி எழுவதைத் தவிர்க்க முடியவில்லை.

விக்னேஸ்வரன் கருத்தைக் கூட்டமைப்பு ஆதரிக்கிறதா இல்லையா? என்பதற்கு அப்பாற்பட்டு தொடர்ச்சியாக தமக்கு வாக்களித்த தமிழ் மக்களையும், சக தமிழ் உறுப்பினர் ஒருவர் அச்சுறுத்தப்படுவதையும் கூட்டமைப்பு கண்டுகொள்ளாமல் இருப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது. நாடாளுமன்றத்தில் விக்னேஸ்வரனின் உரைக்கு எதிராகப் பிள்ளையார் சுழியைப் போட்டு இனவாதத் தீயைப் பற்ற வைத்தவர் மனு' நாணயக்கார.

விக்னேஸ்வரனின் உரை ஹன்சார்டில் இடம்பெறக் கூடாது என்று இவர் பிடிவாதம் பிடித்திருந்தாலும் சபாநாயகர் அதைப் புறந்தள்ளினார். நாடாளுமன்றத்திற்குள் நடைபெற்ற ஒரு விடயத்தை இப்போது பொது வெளியில் ஒரு விவாதப் பொருளாக்கி அதில் வலிந்து சிங்கள மக்களை உள்வாங்கும் நோக்குடன் செயல்படுகிறார் மனு' நாணயக்கார. "சிங்கள மக்களின் பொறுமையைச் சோதிக்கும் வகையில் விக்னேஸ்வரன் இப்படிக் கருத்துக்களை வெளியிட்டால் பாரிய விளைவுகளைச் சந்திக்க நேரிடும். அவரின் கருத்தைச் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேயவர்த்தனவும் நியாயப்படுத்தி அதற்கு ஒத்து ஊதுபவராக இருக்கிறார்" என்று இருவர் மீதும் சீறிப் பாய்ந்துள்ளார் மனு' நாணயக்கார.



ஆனால் அவரது இது போன்ற கருத்துக்கள் தனிப்பட்ட கருத்து, கட்சியின் கருத்து அல்ல என்கிறார் ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க. ஜனாதிபதி தேர்தலிலும் நாடாளுமன்ற தேர்தலிலும் சஜித் பிரேமதாஸவுக்கு தமிழ் மக்கள் வாக்களித்ததை அவர் மறக்கவில்லை என்பதை அத்தநாயக்க நினைவு கூர்ந்தார்.

விக்கிக்கு சம்பந்தி வாசு ஆதரவு விக்னேஸ்வரனுக்கு எதிராக மனுஷ நாணயக்கார நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் கடும் கண்டனத்தை தெரிவித்துவரும் அதேவேளை அவரது சம்பந்தியும் அமைச்சருமான வாசுதேவ நாணயக்கார ஆதரவுக் கரம் நீட்டியுள்ளார்.

இலங்கையின் மூத்த முன்னணி இடதுசாரி அரசியல்வாதிகளில் ஒருவரான வாசுதேவ நாணயக்கார ஒரு தொழிற்சங்கவாதி. ஒரு காலத்தில் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை ஆதரித்த அவர் தற்போது மாறுபட்ட அரசியல் சூழலில் அதை வலியுறுத்த முடியாதவராக இருக்கிறார்.

அவர் ஆளும் கட்சி அமைச்சராக இருந்தாலும் தனது சம்பந்தியை விட்டுக் கொடுக்காமல் அவருக்கு ஆதரவாகக் குரல் கொடுத்துள்ளார். "விக்னேஸ்வரனின் உரையை ஹன்சார்டிலிருந்து நீக்குமாறு கோர யாருக்கும் உரிமையில்லை. அவரது கருத்துடன் அனைவரும் இணங்க வேண்டும் என்பதும் அல்ல. எமக்கு இணக்கம் இல்லையென்பதற்காக ஒருவர் தனது கருத்தை வெளியிடாமல் இருக்க முடியாது. பொதுவாக அவரது கருத்துடன் அநேகமான உறுப்பினர்கள் இணங்கவில்லை அதிலும் நானும் ஒருவன். தமிழர்கள் இலங்கையின் முதல் பூர்வகுடிகள் என்பது அவரது தனிப்பட்ட கருத்து. அதைத் தெரிவிக்க அவருக்கு உரிமையுண்டு. இந்த அடிப்படையில் தான் சபாநாயகரின் தீர்மானமும் அமைந்துள்ளது" என்று வாசுதேவ நாணயக்கார கூறியுள்ளார்.

இந்தக் கருத்தை அவர் நாடாளுமன்றத்துக்கு வெளியே தான் கூறியுள்ளார். "தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும்" என்பது போலுள்ளது வாசுவின் ஆதரவு. விக்னேஸ்வரனின் கருத்துக்கு அப்பாற்பட்டு நாடாளுமன்ற அரசியலுக்கு புதியவரான ஒரு சக தமிழ் உறுப்பினருக்கு கட்சி அரசியலுக்கு அப்பால் ஆதரவளிக்க வேண்டியது அனைத்து தமிழ் உறுப்பினர்களின் தார்மீகக் கடமையாகும். அந்தக் கடமையிலிருந்து தவறினால் அவர்கள் தமிழ் மக்களுக்கு பதில் சொல்ல வேண்டியிருக்கும்.




NATION-WIDE
TALK, TEXT &
DATA PLAN
4.5GB
$40/mo.
chatr
AUTHORIZED DEALER
Scarborough Town Centre
300 Borough Drive | Toronto, ON | 647-847-3634
Offer subject to change without notice. Get 4.5GB at 3G speed. Once you reach your 3G speed data allotment, your data speed will be reduced until your next anniversary date. Taxes extra. ™ Trademarks used under license ©2020


SKN
SKN FINANCIAL
www.sknfinancial.com
அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனம்
கனடாவில் மிகக் குறைந்த வட்டி வீதத்தில் தங்க அடைவு செய்யக் கூடிய ஒரே அடைவு மாடம்
$ அவசரப் பணத் தேவையா? புதிய வியாபாரம் தொடங்கப் பணம் தேவையா?
$ புதிய மஸைன வாங்குவதில் பணச்சிக்கலா?
$ உங்கள் மாதாந்த வட்டியை வங்கியில் கட்டும் வசதியும் உண்டு
$ உங்கள் அடைவுகளை இலகுவாக மீட்பதற்குப் பலவிதமான திட்டங்கள் உள்ளன
$ வட்டித் தொகைக்கு வரிவிலக்கு பற்றுச் சீட்டு வழங்கபடும்
முழுமையாக காப்புறுதி செய்யப்பட்டது
உங்கள் நகைகளுக்குப் பாதுகாப்பு!..
குறைந்த வட்டி!..(2% முதல்)
நிறைந்த பெறுமதி!...
www.sknfinancial.com
SCARBOROUGH
801 Markham Road
(Painted Post Plaza)
Markham & Ellesmere
647-729-5238
BRAMPTON
85 Kennedy Road South, Unit 33
( Next to TIM HORTONS )
Kennedy & Steeles
905-499-0800

# BRAND NEW HOMES IN UXBRIDGE




## Semi Detached & Bungalow Loft Townhouses

**STARTING AT LOW 700'S**


**Location:**
- 15 minutes from Stouffville
- 20 minutes from Ajax
- 30 minutes from Markham

**Incentives for Semi's:**
- $10,000 in décor dollars
- Stainless Steel appliance package
- 5" hardwood on the main floor

**Deposit Structure for Semi's:**
- $20,000 on signing
- $5,000/mo for 10 months
- Total Deposit: $70,000

## The Perfect Home For Your Family/Investment

முற்பதிவுக்கு இன்றே அழையுங்கள்:
416-888-5730




MM HOMES TEAM

# MATHAN MARKANDU

SALES REPRESENTATIVE
CENTURY 21 LEADING EDGE REALTY INC., BROKERAGE*

Direct: 416-888-5730
Office: 905-471-2121
Fax: 905-471-0832

165 Main Street North,
Markham, ON, L3P 1Y2
www.mmhomes.ca



21


Amma
Brand
இப்பொழுது கனடாவிலும்
கிடைக்கின்றது!


Amma
Apple Cider
with Mother Vinegar
LOOSE
WEIGHT
HELPS IN :
WEIGHT MANAGEMENT
GLOWING SKIN
GOOD FOR HEART
BLOOD PRESSURE
URIC ACID
NOW IN
CANADA
100% Natural
Amma
Apple Cider
with Mother Vinegar
Import and Deliver
AMMA FOOD INC.
647-832-5471


Premium Quality
Amma
Gingelly Oil
(Contains Permitted Anti-Oxidants)
சுத்தமான நல்லெண்ணெய்
NOW IN
CANADA
Import and Deliver
AMMA FOOD INC. 647-832-5471
நல்லெண்ணெய்
750ml
375ml


Amma
Herbal
Juices
NOW
IN
CANADA
Jamun with Karela Juice
Aloe Vera Juice
Karela Juice
Amla Juice
Super Energizer
Neem Leaf with Aloe Vera Juice
Body Pain Relax Juice with Aloe Vera
Aloe Noni with Aloevera Juice
100% HERBAL
100% NATURAL
Import and Deliver
AMMA FOOD INC.
647-832-5471

STEELES PODIATRY CLINIC

கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

WE ACCEPT
- Extended Health Care
- Private - Work Insurance
- MVA - WSIB
- ODSP - Social Service

LIST OF SERVICES
- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle - Knee - Back Braces

ENGLISH & TAMIL - SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE



உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறாார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7
416.298.FOOT (3668)


# பாடசாலைக்கு மீளவும் திரும்புதல்

## ரொரன்ரோ மாவட்ட கல்விச் சபை விடுக்கும் முக்கிய அறிவித்தல்

உயர்தர பாடசாலைகளின் மாணவர்களுக்கு செப்டம்பர் 15ம் திகதி பாடசாலை ஆரம்பமாகின்றது.

ஆரம்ப பாடசாலைகளின் மாணவர்களுக்கு அவர்கள் பயிலும் தரங்களுக்கு ஏற்ப, செப்டம்பர் 15ம், 16ம், 17ம் திகதிகளில் ஆரம்பமாகின்றது.

ஆசிரியர்களும் மாணவர்களும் முகக் கவசகம் அணிதல் போன்ற உங்களுக்குத் தேவையான அனைத்து விபரங்களுக்கும் **TDSB.on.ca** என்னும் இணையத்தளத்தைப் பார்க்கவும்.

*நீங்கள் பாடசாலைக்கு சமூகமளிக்கின்றீர்களோ அல்லது இணைய வழி மூலமாக பயிலப் போகின்றீர்களோ, நீங்கள் பாதுகாப்பாக தினமும் வீடு திரும்புவதற்கு நாங்கள் இணைந்து பணியாற்றுகின்றோம்.*

Toronto District School Board

# "தமிழர் பூர்வீககுடிகள்" : விக்கியை துரத்தும் சிங்களப் பேரினவாதம்

- சிவா பரமேஸ்வரன் - மூத்த செய்தியாளர்

இலங்கையின் புதிய நாடாளுமன்றத்தின் முதல் நாள் அமர்வில் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன் ஆற்றிய உரை மீதான சர்ச்சை இன்னும் ஓயவில்லை. "இலங்கையின் பூர்வீகக் குடிகளான தமிழ் மக்களின் பிரதிநிதியாக நான் பேசுகிறேன். அந்த மூத்த குடிக்கு இலங்கையில் இறையாண்மை உள்ளது" என்று, தான் ஆங்கிலத்தில் எழுதி வந்ததை அவர் நாடாளுமன்றத்தில் படித்தார்.



முதல் நாள் அமர்வு என்பதால் அவரது உரைக்கு உடனடியாக எதிர்ப்பு கிளம்பாமல் ஒருவிதமான மௌனம் நிலவியது. அடுத்த நாள் அவரது உரை தேசியப் பத்திரிகைகளில் வெளியானதை அடுத்து சர்ச்சை எழுந்தது. எனினும் இந்த விடயத்தில் பிரச்சினையை எழுப்பியது ஆளும் தரப்பினர் அல்ல. மறு-நாள் நாடாளுமன்ற அமர்வின் போது ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினரான மனுஷ நாணயக்கார விக்னேஸ்வரனை தாக்கும் நடவடிக்கைக்கு "பிள்ளையார் சுழி" போட்டார்.

பிரிவினையைக் கோரமாட்டேன் என்று சத்தியப் பிரமாணம் செய்துவிட்டு அதனை மீறும் வகையில் விக்னேஸ்வரனின் உரை இருப்பதால் அதை அவைக் குறிப்பிலிருந்து (ஹன்சார்ட்) நீக்க வேண்டும் என்று அவர் சபாநாயகரிடம் வேண்டுகோள் விடுத்தார். அது தொடர்பில் உரிய கவனம் செலுத்தப்படும் என்று சபாநாயகரால் அப்போது பதிலளிக்கப்பட்டது.

விக்னேஸ்வரனின் இந்த உரை முழுமையாக ஆங்கிலத்தில் இருந்ததால் பல உறுப்பினர்களுக்கு அது அவ்வேளைப் புரியாமல் இருந்திருக்கலாம். பேசுவதை விட எழுதி வைத்து வாசிக்கும் போது உடனடி மொழிபெயர்ப்பு உறுப்பினர்களுக்கு உரிய வகையில் உறுப்பினர்களுக்குச் சென்றடைவதில் சில நடைமுறை சிக்கல்களும் உள்ளன. மேலும் முதல் நாள் அமர்வு என்பதால் சபையின் கௌரவம் கருதி யாரும் இதைப் பெரிதுபடுத்தாமல் இருந்திருக்கலாம்.

இந்த உரை வெளியாகி 24 மணி நேரத்துக்குள் சிங்கள ஊடகங்கள் இந்த விடயத்தை ஊதிப் பெரிதாக்கும் தங்களது இனவாத ஹதிருப்பணியைஹ ஆரம்பித்தன.

கடும்போக்கு சிங்கள பௌத்தர்களான விமல் வீரவன்ச, சரத் வீரசேகர, உதய கம்மன்பில போன்றோர் விக்னேஸ்வரனுக்கு சவால்விட்டு தமது கருத்துக்களையும் கண்டனங்களையும் ஊடகங்கள் மூலம் வெளிப்படுத்தத் தொடங்கினர். இதில் ஆளும் தரப்பு-எதிர்த் தரப்பு பேதமின்றி சிங்கள பேரினவாதக் குரல் ஒலித்தது.



சஜித் அணி மூட்டிய இனவாத தீ:

அடுத்த நாள் நாடாளுமன்றம் மீண்டும் கூடியபோது தமிழர்கள் பூர்வீகக் குடிகள் எனும் விடயத்துக்கு இனவாத சாயம் பூசி சொல்லடித் தாக்குதலைத் தொடங்கிவைத்தார் ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினரான மனு' நாணயக்கார.

எனினும் முதல் வார அமர்வில் விக்னேஸ்வரனின் உரை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட வேண்டுமென்று மனுஷ நாணயக்கார விடுத்த கோரிக்கை நிராகரிக்கப்பட்டு அது ஹன்சார்ட்டிலும் பதிவானது. ஒரு வாரம் கழித்து நாடாளுமன்றம் கூடிய போது இந்தப் பிரச்சினை மீண்டும் விஸ்வரூபம் எடுத்தது.

சஜித் தரப்பின் மற்றுமொரு நாடாளுமன்ற உறுப்பினரான நளின் பண்டாரவும் இதில் இணைந்து கொண்டார். விக்னேஸ்வரனின் உரை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட வேண்டும் என்பதில் அவர்கள் விடாப்பிடியாக இருந்தனர். இதற்கு ஆளும் மற்றும் எதிர்க்கட்சி வரிசைகளிலிருந்து ஒரு சாரார் ஆதரவுக் குரல் எழுப்பினர்.

விக்னேஸ்வரனின் உரை குறித்து அரசின் நிலைப்பாடு என்ன? என்று தனது சுய அரசியல் இலாபத்துக்காக அரசைப் பொறியில் சிக்க வைக்கும் நோக்கில் ஒரு வினாவை எழுப்பினார் மனுஷ நாணயக்கார. விக்னேஸ்வரனின் உரை தேசத் துரோகம் என்று கூறி அவரை நாடாளுமன்றத்திலிருந்து வெளியேற்ற வேண்டும் என்று நடைமுறைக்கு ஒவ்வாத கருத்தையும் அவர் முன்வைத்தார்.

எனினும் இந்த விடயத்தில் மனுஷ நாணயக்காரவுக்கு பதிலளித்த சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேயவர்த்தன "இது ஒழுங்குப் பிரச்சினை அல்ல, உங்களுக்கும் கருத்து தெரிவிக்க உரிமை உண்டு. உங்களுக்கு ஒதுக்கப்படும் நேரத்தில் அதைத் தெரிவிக்கலாம். இதில் அரச நிலைப்பாடு எதிர்க்கட்சி நிலைப்பாடு என்று ஏதும் இல்லை, இவை தனிப்பட்ட உறுப்பினர்களின் கருத்துஹஹ என்று பதிலளித்து விக்னேஸ்வரனின் உரையை அவைக் குறிப்பிலிருந்து நீக்க முடியாது" என்று திட்டவட்டமாக அறிவித்துவிட்டார்.




இந்த வாக்குவாதம் நடைபெற்றுக் கொண்டிருந்த போது விக்னேஸ்வரன் தனித்து விடப்பட்ட நிலையில் மௌனமாக இருந்தார்.

பேரினவாதிகளின் குரல்:

விக்னேஸ்வரனின் உரைக்கு நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளி-யேயும் இன ரீதியான தாக்குதல் தொடருகின்றன. இதில் சிங்கள பௌத்த கடும்போக்காளர்கள் கட்சி பேதமின்றி கூட்டு நடவடிக்கையொன்றை ஆரம்பித்துள்ளனர். ஒரு கருத்தை ஆதாரபூர்வமாக எதிர்கொள்வதற்குப் பதிலாக அக்கருத்துக்கு இனச் சாயம் பூசி சொல்லப்பட்ட கருத்து சரியா தவறா என்பதை ஆராய்வதை விட்டு அதை திசை திருப்பும் செயலில் பேரனவாத மனப்பான்மை கொண்ட சில உறுப்பினர்கள் ஈடுபட்டனர்.

நாடாளுமன்றத்தில் விக்னேஸ்வரனின் உரையை அவமதித்துப் பேசிய அமைச்சர் சரத் வீரசேகர, "விக்னேஸ்வரன் தமிழர்களுக்கு சுயநிர்ணய உரிமையைக் கேட்பது சூப்பர் மார்க்கெட்டில் லொலி பாப் கேட்பது போல் உள்ளது" என்று கிண்டல் செய்தார்.



கடந்த 2010 ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்ட சரத் பொன்சேகாவை அவர் மீது போர் குற்றச்சாட்டுக்கள் இருந்த நிலையிலும் மஹிந்த ராஜபக்சவை தோற்கடிக்க வேண்டும் என்ற காரணத்தால் பெரும்பாலான தமிழர்கள் ஆதரித்திருந்தனர். ஆனால் அவர் நன்றி விசுவாசத்தை மறந்து விக்னேஸ்வரன் கூறிய கருத்தைக் கடுமையாக சாடினார்.

"தேசியம் சுயநிர்ணயம் பேசி இளைஞர்களை தவறாக வழி நடத்திய அமிர்தலிங்கம், பிரபாகரன் ஆகியோருக்கு நடந்தது என்ன என்பதை விக்னேஸ்வரன் நினைத்துப் பார்க்க வேண்டும். இதே தவறை அவர் தொடர்ந்து செய்தால் விளைவு-களைச் சந்திக்க நேரிடும்" என்று இராணுவ பாணியில் எச்சரிக்கை விடுத்தார்.

பத்தாண்டுகளுக்கு முன்னர் தமிழர்களின் அமோக ஆதரவு காரண-மாக அவர் ஜனாதிபதியாத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தால் தமிழர்களின் நிலை என்னவாகியிருக்கும் என்பதை இந்நேரத்தில் தமிழ் மக்கள் எண்ணிப் பார்க்க வேண்டியவர்களாக உள்ளனர். அவரை அப்போது முழு மூச்சாக ஆதரித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இப்போது மௌனம் காப்பது ஏன்?

விக்னேஸ்வரின் தெரிவித்த கருத்துக்கான எதிர்ப்பு நாடாளுமன்றத்துக்கு வெளியேயும் தொடர்ந்தன. அவரை உரையை நிராகரித்த அமைச்சர் உதய கம்மன்பில விக்னேஸ்வரனை நேரடி விவாதத்துக்கு வருமாறு வம்புக்கு இழுத்தார்.

தமிழர் இனப்பிரச்சினை என்பதைக் கேட்டாலே வெறுப்பை உமிழும் மற்றொரு அமைச்சரான விமல் வீரவனச. "விக்னேஸ்வரன் தனது வாயை உடன-டியாக அடக்க வேண்டும். இதனை மீறி சபையில் ஊளையிட்டால் ஓட ஓட வீட்டுக்கு விரட்டியடிப்போம்" என்று தனது வழக்கமான பாணியில் அநாகரீகமற்ற வார்த்தைகளை வீசியுள்ளார். இந்த விடயம் அரசியல் வாதிகளுக்கு மட்டுமல்ல பௌத்த சிங்கள பேரினவாத அமைப்புகளுக்கும் "வெறும் வாயில் அவலை மெல்வது போல" தமது வெறுப்புகளைக் காட்ட ஒரு வாய்ப்பாக அமைந்துள்ளது.

தமிழ்த் தேசியவாதிகள் மௌனம்:

தமிழர்கள் இலங்கையின் முதல் பூர்விகக் குடியென்று விக்னேஸ்வரன் சபையில் முன்வைத்த கருத்துக்கு எதிர்ப்பும் கண்டனக் குரல்களும் எழுந்த நிலையில், அவர் எதிர்கொண்ட சொல்லடிகளுக்கு மௌனமே அவரது பதிலாக இருந்தது. ஆனால் அவரைப் போன்று தமிழ்த் தேசியம் பேசி நாடாளுமன்றம் வந்த வேறு எவரும் அவருக்கு ஆதரவாகக் குரல் எழுப்பவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகிய கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்களுக்கு உரையாற்றக் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அவரது கருத்தை நியாயப்படுத்தத் தவறிவிட்டனர். யாழ்ப்பாண உள்ளூர் அரசியல் நாடாளுமன்றத்திலும் வெளிப்பட்டதாகவே தோன்றுகிறது. இருப்பினும் ஜனாதிபதித் தேர்தலில் சஜித்துக்கு ஆதரவு கொடுத்ததை நினைவுபடுத்திய த.தே.கூ உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் விக்னேஸ்வரன் உரைக்கு சஜித் தரப்பு இப்படி எதிர்ப்புத் தெரிவிப்பது வேதனையளிப்பதாக மேலோட்டமாக பட்டும் படாமலும் பேசினார்.



இந்த விவகாரத்தில் சபாநாயகருக்கும் மனுஷ நாணயக்காரவுக்கும் இடையே நடபெற்ற வாதத்தின் போது குறுக்கீடு செய்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் சபாநாயகருக்கு பக்க பலமாகவும் விக்னேஸ்வரனுக்கு ஆதரவா-கவும் குரல் கொடுத்தார்.

"நாடாளுமன்ற சிறப்புரிமைச் சட்டத்தின் கீழ் சகலருக்கும் கருத்து தெரிவிக்க உரிமை உள்ளது. நாட்டின் சட்டத்திற்கு எதிரான வகையில் கருத்துத் தெரிவிக்கப்படுவதாக இருந்தால் பொலிஸில் முறைப்பாடு செய்து நடவடிக்கை எடுக்க முடியும். இந்த விடயத்தில் சபாநாயகர் எடுத்த முடிவு சரியானது" என்று அந்தத் தீர்ப்பை நியாயப்படுத்தினார் ஹக்கீம்.

"தமிழ் மக்களின் காவலன்" என்று தன்னைக் கூறிக் கொள்ளும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசனும் இந்த விடயத்தில் நாடாளுமன்றத்தில் மௌனம் சாதித்தது ஆச்சரியமளிக்கிறது. எந்த விடயமா-னாலும் உடனுக்குடன் சமூக வலைத்தளங்களில் தனது கருத்தைப் பதிவிடும் மனோ கணேசன் இந்த விடயத்தில் உடனடியாக கருத்து ஏதும் தெரிவிக்கவில்லை.

இருந்தாலும் தாமதமாகத் தனது கருத்தை வெளியிட்டுள்ளார். "இது விக்னேஸ்வரனின் தனிப்பட்ட கருத்து. சபாநாயகர் பதிலளித்து விட்டார். எனவே இதனைத் தொடர்ந்தும் விவாதப் பொருளாக்கக் கூடாது. தமிழ் மொழி இலங்கையின் பூர்வீக மொழியா இல்லையா? என்பது எனக்குத் தெரியாது. ஆனால் உலக-ின் மிகவும் பழமை வாய்ந்த மொழிகளில் ஒன்று. இதனை ஊதிப் பெரிதாக்கி இனவாதம் பேசி மக்களைக் குழப்ப வேண்டாம்". இதுவே தனது கூட்டணியின் சகாக்களுக்கும் ஆளும் தரப்புக்கும் அவர் அளித்த பதில்.

விக்கியும் விடுவதாக இல்லை:



தன்னை பகிரங்க விவாதத்துக்கு வருமாறு சவால் விடுத்த அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு பதிலளிக்கும் வகையில் விக்னேஸ்வரன் தனது கருத்தில் உறுதியாக இருக்கிறார்.

கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற நாடாளுமன்ற அமர்வில் "தமிழர்கள் இலங்கையின் பூர்வகுடிகள்" எனும் கருத்தை மீண்டும் நிலைநிறுத்தினார்.

"எனது உரை யாரையும் வசைபாடுவதாகவோ அல்லது புண்படுத்தும் வகையிலோ அமையவில்லை. எனது முடிவுகளில் தவறுகள் இருக்குமானால் மற்றவர்கள் சுட்டிக் காட்டலாம் மாறாகக் குழப்பமடைந்து என்னைத் தூற்றி பொது விவாதத்துக்கு அழைப்பதன் மூலம் ஒரு பொய் உண்மையாகவோ அல்லது ஒரு உண்மை பொய்யாகவோ ஆகிவிடாது. தேவையேற்பட்டால் எமது வரலாறு மற்றும் பாரம்பரியம் தொடர்பில் சிறந்த அறிவு கொண்ட சிங்கள, தமிழ், முஸ்லிம் மற்றும் சர்வதேச ரீதியிலான வரலாற்று ஆய்வாளர்களைக் கொண்ட ஆணைக் குழுவொன்றை அமைக்கலாம்" என்று விக்கினேஸ்வரன் தனது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தினார்.

ஒரு கருத்தைப் பதில் கருத்து மூலம் எதிர்கொள்வதை விடுத்துத் தனிப்பட்ட முறையில் இனரீதியான தாக்குதலை முன்னெடுப்பது ஜனநாயகத்தின் மாண்பைக் குலைக்கும் செயலாகவே பார்க்கப்படும். வரலாற்று ரீதியாக ஒரு விடயத்தில் தெளிவின்மை இருந்தால் அதை தெளிவுபடுத்தி முற்றுப்புள்ளி வைக்கும் கடமை அரசு மற்றும் அனைத்து சமூகங்களுக்கும் உள்ளதை யாரும் மறக்கவோ அல்லது மறுக்கவோ முடியாது.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ச ஆகியோர் தொடர்ந்து தாங்கள் இலங்கையர்கள் அனைவருக்குமானவர்கள் என்று கூறி வரும் நிலையில் இன முரண்பாடுகள் மேலும் விரிவடைவதைத் தடுத்து அதற்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு கடமை பட்டவர்கள்.

அந்த முன்னெடுப்பை அவர்கள் இருவரும் செய்தால் மட்டுமே இலங்கையில் நீடித்திருக்கக் கூடிய இணக்கப்பாட்டை முன்னெடுக்க முடியும் என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. மானுடவியல் மற்றும் மரபுரீதியாக தமிழ் மற்றும் சிங்களவர்கள் ஒரே இனக் குழுவைச் சேர்ந்தவர்கள் என்று வரலாற்று ஆய்வாளர்கள் தொடர்ந்து கூறி வந்துள்ளனர்.

Ontario வில் அரச அங்கீகாரம் பெற்ற

# கனகாம்பிகை

## தங்கநகை அடகுமாடம்

## KANAGAAMBIKAI

PAWN BROKERS





25
வருடங்கள்

## உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த வட்டி வீதத்தில் தங்க நகை அடவு

நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய

ஒரே கூரையின் கீழ்

# கனகாம்பிகை

## பவுண் வங்கி

## தங்கம் வாங்க கனகாம்பிகைக்கு வாங்க...

2613 Eglinton Ave. East, Scarborough ON M1K 2S2

# 416 269 7198

# இவ்வார ராசிபலன்

**04-09-2020 வெள்ளி தொடக்கம் 10-09-2020 வியாழன் வரையும்**




**மேஷம்:** தகுதிகள் மிகுதியாகக் கிடைக்கக்கூடிய வாரம். முகப் பொலிவு கூடும். தொழில் முன்னேற்றம் ஏற்படும். தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும். சொத்துக்களால் லாபம் கிடைக்கும். சுறுசுறுப்பு பெருகும். புண்ணிய காரியங்களில் ஈடுபடுவீர்கள். தாய்வழி உறவில் கவனம் தேவை. பறவைகளிடம் அன்பு அதிகரிக்கும். அலைபேசியால் அலைச்சல் அதிகமாகும். கலவரமான சூழ்நிலை காணப்படும். கணவன், மனைவி வாக்குவாதம் ஏற்படும். மத வழிபாடு மாற்றம் தரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: சந்தான கணபதி, அதிர்ஷ்ட எண்: 7,4,5,2
அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,N




**ரிஷபம்:** அதிகாரமான வகையில் ஆதாயம் உண்டாகக்கூடிய வாரம். ஆதாயம் பெருகும். சகோதரியினால் நன்மை உண்டு. உடல் நலம் மேம்படும். புதிய முதலீடு தவிர்க்கவும். கணவன், மனைவி உறவு மேம்படும். தொழில் அபிவிருத்தி அடையும். மாணவர்கள் கல்வியில் சிறப்பார்கள். கலைஞர்களுக்கு புதிய வாய்ப்புகள் கிடைக்கும். பிள்ளைகளால் மனக் கசப்பு வந்து நீங்கும். வீடு, மனை ஆசைகள் பூர்த்தியாகும். தொழிலில் முதலீடு செய்வதை தவிர்க்கவும். பருப்புதானம் பாவம் போக்கும்.
வழிபட வேண்டிய தெய்வம்: அலங்காரப் பெருமாள், அதிர்ஷ்ட எண்: 3
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: W,Y




**மிதுனம்:** உற்சாகத்தோடு செயல்பட்டு உயர்வுகள் காண வேண்டிய வாரம். இடமாற்றத்தால் இனிய தகவல் உண்டு. பயணம் வெற்றி தரும். பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். பதவி உயர்வு கிட்டும். மனக்கசப்பு நீங்கும். அரசு வழியில் ஆதாயம் கிடைக்கும். கணினி துறையில் ஊதிய உயர்வு கிட்டும். திறமைகள் வெளிப்படும் வாரம். ஆரோக்கியம் சீராகும். சூழ்ச்சிகள் இருந்து விடுபடுவீர்கள். மங்கள நிகழ்ச்சிகளில் பங்கு பெறுவீர்கள். பைரவ வழிபாட்டால் பாவம் தீரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: அங்காளம்மன், அதிர்ஷ்ட எண்: 6,0,2,3
அதிர்ஷ்ட நிறம்: வெண்பட்டு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,N




**கடகம்:** தனவரவும், பணவரவும் தாராளமாக கிடைக்கக்கூடிய வாரம். செயல் திறமை வெளிப்படும். சிந்தனைகள் மேலோங்கும். சேமிப்பு அதிகமாகும். முற்போக்கு சிந்தனை வரும். பங்குத் தொழிலில் பணம் தரும். புதிய எண்ணங்கள் உருவாகும். வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும். கூட்டுத் தொழில் லாபம் தரும். உணவுத் தொழில் உயர்வு தரும். தொலைபேசி தகவல் தொல்லைத் தரும். செயல் விவேகம் கூடும். குளிர்பான தொழிலில் கவனம் தேவை.
வழிபட வேண்டிய தெய்வம்: கொண்டத்துக் காளியம்மன், அதிர்ஷ்ட எண்: 0,1,7,2
அதிர்ஷ்ட நிறம்: வைலட், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,A




**சிம்மம்:** சஞ்சலமும், சந்தோஷமும் கலந்த வாரம். தனவரவு பெருகும். விபரீத எண்ணம் விலகும். பேச்சில் நிதானம் தேவை. புதிய நட்பு உருவாகும். பழைய கடன் தீரும். உதவும் குணம் அதிகரிக்கும். சாதகமான சூழ்நிலைகள் உருவாகும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். உடல் நிலையில் கவனம் தேவை. உறவினர் வருகை உண்டு. வணிகத் தொழில் வளம் கூடும். பழைய பாக்கி வசூலாகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: மருதகாளியம்மன், அதிர்ஷ்ட எண்: 9,2,1,6
அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,S




**கன்னி:** வறுமைகள் விலகி பெருமைகள் உண்டாகக்கூடிய வாரம். உற்சாகம் அலை மோதும். பணக்கட்டுப்பாடு அவசியம். மாற்றத்தை விரும்புவீர்கள். தோற்றம் தெளிவு கூடும். ஏற்றங்கள் அமையும். மனைவியின் கோபம் அதிகரிக்கும். உடல்நலனில் அக்கறை தேவை. பிள்ளைகளால் அலைச்சல் உண்டு. விளையாட்டுத் துறையில் வெகுமதி கிடைக்கும். உத்தியோக இடமாற்றம் உண்டு. ஷேர் மார்க்கெட்டில் லாபம் தரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: கைலாசநாதப் பெருமாள், அதிர்ஷ்ட எண்: 3,0,7,1
அதிர்ஷ்ட நிறம்: இளம் பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,L




**துலாம்:** மனம் எதிர்பார்த்த பணம் கிடைக்கக்கூடிய வாரம். வயிற்று உபாதைகளும் உண்டு. வாழ்வில் வசந்தம் உணடு. வாகனத்தால் செலவு உண்டு. வாழ்க்கையில் மேன்மை உண்டு. சிறப்புகள் சேரும் நாள். பணப்பற்றாக்குறை தீரும். குடும்ப குழப்பம் தீரும். கல்வியில் கவனம் தேவை. பெற்றவர்களின் வாழ்த்து உண்டு. கடன் வாங்க நேரிடும். மற்றவர்களால் மேன்மை உண்டு. வரவுகளால் திருப்தி உணடு.
வழிபட வேண்டிய தெய்வம்: பொன்னியம்மன், அதிர்ஷ்ட எண்: 7,4,3,1
அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: B,X




**விருச்சிகம்:** பொருளும், அருளும் சேரக்கூடிய பொன்னான வாரம். கனிவான காரியம் கைகூடும். கலைத்துறையில் ஆர்வம் ஏற்படும். வில்லங்கம் விலகும். போட்டிகள் உருவாகி மறையும். வியாபாரத்தில் கவனம் தேவை. வீடு வாங்கும் யோகம் உணடு. வயிறு உபாதைகள் தோன்றி மறையும். வழக்குகள் சாதகமாகும். வரவு திருப்தி தரும். குடும்ப கௌரவம் உயரும். குதூகலமான எண்ணம் உருவாகும். மின்சாரத்தில் கவனம் தேவை.
வழிபட வேண்டிய தெய்வம்: அக்னீஸ்வர பகவான், அதிர்ஷ்ட எண்: 4,6,1,5
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,P




**தனுசு:** ஆறுதலும், ஆதாயமும் கிடைக்கக் கூடிய அற்புதமான வாரம். அமைதியான பிரபலங்களை சந்திக்கும் வாய்ப்பு ஏற்படும். வெற்றி வீடு தேடிவரும். விவேகம் கைகொடுக்கும். செல்வச் செழிப்பு உயரும். காரியம் கைகூடும். தெளிவான முடிவுகள் உதயமாகும். பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும். திருஷ்டிகள் விலகும். ஆடம்பர பொருள் சேரும். உடல் சோர்வு ஏற்படும்.
வழிபட வேண்டிய தெய்வம்: யானைப்பாத விநாயர், அதிர்ஷ்ட எண்: 8,0,1,1
அதிர்ஷ்ட நிறம்: செம்மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,O




**மகரம்:** ஓசை இல்லாமல் ஆசைகள் நிறைவேறக்கூடிய அற்புதமான வாரம். சகோதரியால் அனுகூலம் உண்டு. அபரணச் சேர்க்கை உண்டு.கலைத்துறையில் திருப்பம் உண்டு. கடன் சுமை அதிகரிக்கும். மாணவர்கள் படிப்பில் கவனம் தேவை. அரசு வகையில் ஆதாயம் உண்டு. குடும்ப கௌரவம் உயரும். ஆபரணச் சேர்க்கை உண்டு. மறைமுக எதிர்ப்புகள் விலகும். கூட்டுத்தொழிலில் கவனம் தேவை. பொருள் இழப்பு ஏற்படும்.
வழிபட வேண்டிய தெய்வம்: அங்காள பரமேஸ்வர், அதிர்ஷ்ட எண்: 4,7,3,2
அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,V




**கும்பம்:** மதியைப் பயன்படுத்தி நிதியையும் நிம்மதியையும் பெறக்கூடிய வாரம். காரியத்தடை ஏற்படும். உறவினர்களால் நன்மை உண்டு. எதிரிகளால் தொல்லை உண்டாகும். பழைய கடன் வசூலாகும். வாகனச் செலவு ஏற்படும். வெளிநாட்டு தொடர்பு ஏற்படும். திறமையில் பெருமை சேரும். பேச்சில் இனிமை கூடும். கலைத் தொழிலில் நிலை உயரும். சான்றோர்களின் சந்திப்பு கிட்டும். உதவிகள் கிடைக்கும் நாள். மனைவியின் பிரார்த்தனை மாற்றம் தரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: கனக துர்க்கை அம்மன், அதிர்ஷ்ட எண்: 6,9,2,3
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,U




**மீனம்:** இக்கட்டான சூழ்நிலைகள் அப்பட்டமாக விலகக்கூடிய வாரம். மனோ தைரியம் அதிகரிக்கும். நீண்டநாள் ஆசை நிறைவேறும். கமிஷன் தொழில் லாபம் தரும். விருந்தினர் வருகை உண்டு. கௌரவம் உயரும். கலைத்துறை ஈடுபாடு அதிகரிக்கும். மெத்தன போக்கு விலகும். புதிய நட்பு ஏற்படும். விவசாயம் பலன் தரும். அரசு வழி ஆதாயம் உண்டு. திருப்தி ஏற்படும் நாள். ஆபரணச் சேர்க்கை ஏற்படும்.
வழிபட வேண்டிய தெய்வம்: அய்யனார் சுவாமி, அதிர்ஷ்ட எண்: 8,2,5,6
அதிர்ஷ்ட நிறம்: வெள்ளை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: C,R


ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
'ராஜயோகம்'
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377

(9ம் பக்கத் தொடர்ச்சி)

## தமிழ்நாடு திருநெல்வேலிக்கு இன்று 230 வயது

திருநெல்வேலி மாநகரப்பகுதிக்குள், திருநெல்வேலியும், பாளையங்கோட்டையும் ஒட்டிப்பிறந்த இரட்டை நகரங்களாக விளங்குகின்றன.

நடுவில் ஓடும் தாமிரபரணி ஆறு, புவியியல்ரீதியாக இரு நகரங்களையும் பிரித்தாலும், தன் நீர் வளத்தால் இணைத்தே வைத்திருக்கிறது. அதோடு, திருநெல்வேலியையும், பாளையங்கோட்டையையும் இணைக்கும் 178 ஆண்டு பழமை வாய்ந்த "சுலோசனா முதலியார்" ஆற்றுப்பாலமும் இம்மாநகரின் தன்னிகரில்லா தனித்த அடையாளமாக விளங்குகிறது.

நெல்லையோடு இணைந்த பாளையங்கோட்டைக்கு தென்னிந்தியாவின் ஆக்ஸ்போர்டு என்ற சிறப்புப் பெயரும் உண்டு. சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே கல்விப்பணியில் தமிழகத்திலேயே சிறந்து விளங்கி வருகிறது, பாளையங்கோட்டை.

இங்கு சாலைகள் தோறும் கல்விச்சாலைகளை காண முடியும். ஒரு நகரத்தில் பள்ளி, கல்லூரிகள் இருப்பது இயல்பு. ஆனால் பள்ளி, கல்லூரிகளுக்காகவே ஒரு நகரம் இருப்பது இங்கே நெல்லையில் தான். 55 ஆண்டு பெருமை வாய்ந்த திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரியும், அதனுடன் இணைந்து சமீபத்தில் தொடங்கப்பட்ட உயர் சிறப்பு மருத்துவமனையும் (ளூரிநச ளிநஉயைடவைல ர்ழளிவையட) அமைந்திருப்பது, பாளையங்கோட்டையில் தான்.

திருநெல்வேலியில் இருந்து எந்தத் திசையில் சென்றாலும் வெறும் 50-80 கிலோ மீட்டர் தூரத்தில் ஒரு சுற்றுலா தலமோ, கோவிலோ வந்துவிடும். உதாரணத்திற்கு ,

கிழக்கே - திருச்செந்தூர், தூத்துக்குடி துறைமுகம், உவரி, மணப்பாடு
மேற்கே - பாபநாசம், தென்காசி, குற்றாலம்
தெற்கே - நாகர்கோவில், கன்னியாகுமரி
வடக்கே - கழுகுமலை, சங்கரன்கோவில், ஸ்ரீவில்லிபுத்தூர்.

இப்படி சுற்றிச் சுற்றி சுற்றுலா தலங்களையும், கோவில்களையும் கொண்டதாக விளங்குகிறது, நெல்லை மாவட்டம்.

தாமிரபரணி ஆற்றுக்கு மத்தியில் குறுக்குத்துறை முருகன் கோவில் அமைந்திருப்பதும் நெல்லையின் சிறப்புகளில் ஒன்று.

நவ கைலாச கோவில்கள், தாமிரபரணி கரையோரம் வரிசையாக அமைந்திருக்கின்றன. அதுமட்டுமில்லாமல் நூற்றுக்கணக்கான பழம்பெரும் கோவில்கள், தொன்மையான கிறிஸ்தவ தேவாலயங்கள், மசூதிகள் என ஆன்மிக மணம் நெல்லை மண்டலம் முழுவதும் வீசிக்கொண்டு இருக்கிறது.

"மத நல்லிணக்க மாநகரம்"

திருநெல்வேலி மாநகரின் மிகப்பெரும் சிறப்பு என்ன தெரியுமா? 1995-க்கு முன்பு வரை, திருநெல்வேலி, பாளையங்கோட்டை, மேலப்பாளையம் என 3 நகராட்சிகள் (ஆரௌைஉனியட ஊழரஉெடைள) இயங்கி வந்தன.

இவற்றில், திருநெல்வேலியில் இந்துக்கள் அதிகம் பாளையங்கோட்டையில் கிறிஸ்தவர்கள் அதிகம் மேலப்பாளையத்தில் இஸ்லாமியர்கள் பெரும்பான்மை. இந்த 3 நகராட்சிகளையும் இணைத்துத்தான், "திருநெல்வேலி மாநகராட்சி" (Tirunelveli Municipal Corporation) உருவாக்கப்பட்டது. அவ்வகையில் மும்மத மக்களும் ஒற்றுமையாக வாழும் "மத நல்லிணக்க மாநகராட்சி" என்ற பெருமையும் நெல்லை மாநகராட்சிக்கு உண்டு.

"நீராருங்கடலுடுத்த..." எனத்தொடங்கும் தமிழ்த்தாய் வாழ்த்துப்பாடலை இயற்றிய மனோன்மணியம் சுந்தரனார் இம்மண்ணுக்குச் சொந்தக்காரர் என்பதும், அவர் பெயரால் இங்கே "நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்" இயங்கி வருவதும் நெல்லைக்கு சிறப்பு சேர்க்கும் கூடுதல் அம்சமாகும்.

ஆசியாவிலேயே 2-வது பெரிய ஈரடுக்கு மேம்பாலம், 47 ஆண்டுகளுக்கு முன்பே அமையப்பெற்றதும் நெல்லையில் தான்.

இன்னும் எண்ணற்ற பெருமைகள், நெல்லைக்கு உண்டு. பக்கம் பக்கமாக சொல்லிக்கொண்டே போகலாம்.

மாவட்டமாக உருவெடுத்து இன்று 230-வது பிறந்தநாள் காணும் திருநெல்வேலிச்சீமையின் புகழ் திக்கெட்டும் பரவட்டும்! வாழ்க!வளர்க!!

--திருநெல்வேலிக்காரன் என்ற பெருமையுடன்
மணிராஜ்.

# சிவன் கோயிலுக்குக் கொடுப்பதால் மட்டுமே அதிக நன்மை கிடைக்கும்!

## சிவன் கோயில்களுக்குக் கொடுப்பதற்கு புண்ணிய பலன் வேண்டும்!

எந்தக் கோயிலும் கட்டலாம் எந்தக் கோவிலுக்கும் கொடுக்கலாம் ஆனால் சிவன்கோயில்களுக்குக் கொடுப்பதற்கு கோடி கோடியாகப் பணம் இருந்தலும் புண்ணிய பலன் உள்ளவர்களுக்கே கொடுக்கும் பாக்கியம் உண்டாம்

## நம்பனை(சிவனை) நம்பினார் கைவிடப்படார்!

நம்பனாகிய சிவபெருமானை நம்பி வழிபடுவோர் கெட்டுப்போனதாகவோ கைவிடப்பட்டதாகவோ சரித்திரமே இல்லை. தமிழ் பேரரசர்கள் எல்லோருமே சிவாலயங்களைக் கட்டித்தான் சிறப்போடு அரசாண்டார்கள். சிவனடியார்கள் சந்ததி பல தலைமுறைகள் சிறப்போடு வாழ்ந்தார்கள். சிறப்போடு வாழ்ந்து கொண்டும்தான் இருக்கிறார்கள். போர்ச் சூழலோ பஞ்சமோ கொடிய வருத்தங்கள் பரவினாலோ இப்படியான அனர்த்தங்கள் வந்தாலும் சிவனடியார்களுக்கு பாதிப்புக்கள் வராது. தங்கள் சொத்துக்களில் பெரும்பகுதியை சிவன் கோயில்களுக்கு கொடுத்தவர்கள் சந்ததிகள் சிறப்போடு வாழ்ந்தார்கள் சிறப்போடு வாழ்ந்து கொண்டும்தான் இருக்கிறார்கள்.

## செட்டிமார்கள் என்று சொல்லப்படுகின்ற வணிக குலத்தவர்கள் சிவாலயங்களைக் கட்டி சிவ வழிபாடு செய்து பெரும் செல்வந்தர்களாக வாழ்ந்தார்கள்!

நாடு பொருள் வளம் கொண்டதாக இருப்பதற்கு வணிகம் மிக முக்கிய இடத்தை வகிக்கிறது. முத்தமிழ் பேரரசுகள் காலங்களில் தமிழர்கள் கடல் கடந்த வாணிபத்தில் சிறந்து விளங்கியபோதெல்லாம் சிவ வழிபாடே மேன்மையாக விளங்கியது. அந்தக் காலத்தில் மட்டுமல்ல இன்றும் தமிழகத்தில் செட்டிமார்கள் எனப்படும் வணிக குலத்தவர்கள் சிவாலயங்களைக் கட்டி வழிபடுவதை தமிழகத்தில் காணலாம்.

## செல்வத்துக்கு அதிபதி சிவ பக்தரான குபேரன்!
## மகாலட்சுமி குபேரனிடம் கடன் வாங்கியே மக்களுக்குக் கொடுக்கிறாள்!

குபேரனுக்கு சங்கநிதி பதுமநிதி கொடுத்து செல்வத்துக்கு அதிபதி ஆக்கினார் சிவபெருமான்! சிவனடியார்களுக்கு குபேரனே செல்வங்களை கொடுக்கிறார். மகா லட்சுமி குபேரனிடம் கடன்வாங்கியே மக்களுக்கு செல்வத்தை வழங்குகிறாள் அவளால் வழங்கும் செல்வமானது தற்காலிகமானது அடுத்த தலைமுறைக்கு நிற்பதில்லை. ஆனால் குபேரனால் சிவனடியார்களுக்கு வழங்கும் செல்வமானது பல தலைமுறைகளுக்கு நிலைக்கிறது. குபேரன் வடதிசையிலிருந்து சிவனை வழிபட்டு சிவனடியார்களுக்கு வற்றாத செல்வத்தை வழங்குகிறார்.

## சிவாலயங்களுக்குக் கொடுப்பது ஆயிரம் மடங்காக புண்ணிய பலனோடு திரும்பக் கிடைக்கிறது! பல தலைமுறைக்கும் சொத்து வளர்கிறது!

எந்தக் கோயிலும் கட்டலாம், எந்தக் கோவிலுக்கும் திருப்பணி செய்யலாம் ஆனால் சிவன் கோவில் கட்டுவதற்கும் சிவன் கோயில் திருப்பணி செய்வதற்கும் பல பிறவிகளில் செய்த புண்ணிய பலனாலேயே வாய்ப்புக் கிடைக்கிறது. சிவாலயங்களுக்குக் கொடுப்பதனால் கொடுக்கும் தொகை புண்ணிய பலனோடு ஆயிரம் மடங்காக திருப்பக் கிடைப்பதோடு பல தலைமுறைகளுக்கும் அந்தப் பலன் கிடைக்கிறது, பல பிறவிகளுக்கும் அந்தப் புண்ணிய பலன் கைகூடுகிறது.

## கனடாவில் வாழும் சைவ மக்களுக்கு இப்போது அரிய சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது!

கனடா பெரிய சிவன் ஆலய இடத்தை ஆலயத்துக்கு சொந்தமாக வாங்குவதற்கு உரிய நேரம் வந்துவிட்டது அதனை வாங்குவதற்கு உங்களால் ஆன பங்களிப்பைச் செய்து சிவன் பார்வதியோடு சகல தெய்வங்களின் பேரருளைப் பெற்று அடுத்த சந்ததிகளுக்கும் வாழையடி வாழையாக சிறப்போடு வாழும் புண்ணிய பலனைப் பெற்றுக் கொடுத்து தேவர்களைப் போன்று வாழும் பேரருளைப் பெறக் கடவீர்களாக

சைவத்தின் மேல் வேறு சமயம் இல்லை சிவனோடு ஒக்கும் தெய்வம் தேடினும் இல்லை

உங்கள் அன்புக்குப் பாத்திரமான சிவனடிமை
கலாநிதி அடியார் விபுலானந்தா
ஸ்தாபகர், தர்மகர்த்தா, கனடா பெரிய சிவன் ஆலயம்
ஸ்தாபகர் சைவ சமயத் தலைவர், உலக சைவத் திருச்சபை

## வட அமெரிக்காவிலே புனித திருத்தலமாக வளரும்

# பெரிய சிவன் ஆலயம்

## கேட்கும் வரங்களைக் கொடுத்துக் கொண்டிருப்பவளாம் உண்ணாமுலை அம்பிகையின் ஆலயம்

"சைவத் தமிழர்களே தன்மானம் காப்பவர்கள்"

"சைவத் தமிழர்களால் மட்டுமே தமிழினத்தை முன்னேற்ற முடியும்"

**பெரிய சிவன் ஆலயம்**
1148 பெலாமிவீதி (near Progress) ஸ்காபரோ ( 2 minutes from 401 HWY )
(416) 769-7747, (416) 907-7434



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
416-332-0269 vasantha@rogers.com

# ஈழத்துத் திருக்கோவில்கள் 911



## மயூரபதி பத்திரகாளி அம்பாள் ஆலயம்

### - கொழும்பு -

உலகெங்குமுள்ள கோடிக்கணக்கான மக்கள் கொரோனா வைரசினால் பாக்கப்பட்டதோடு பல இலட்சம் மக்கள் தமது இன்னுயிர்களை நீத்த நிலையில் அஞ்சி அஞ்சி வாழும் நிலை காணப்படுகின்றது. செய்வதறியாது அரசுகள் மக்களைக் காப்பாற்ற பல்வேறு வழிகளைக் கையாள்கின்றன. கனடாவில் வதியும் மக்கள் அரசின் வழிகாட்டல்களை ஏற்று பெருமளவு பாதிப்புக்களிலிருந்து தப்பி வாழ்கின்றனர். கனடிய அரசிற்கு அனைவரும் தலைவணங்குவோம். இதேவேளை ரொறன்ரோவில் வாழும் மக்கள் ஒன்ராரியோ தலைமையும், ரொரன்ரோவின் தலைமையும் காட்டும் வழியில் பயணித்து, பேரிழப்புக்களை தவிர்த்து வாழ்கின்றனர். வழிகாட்டிகயாகிய இவர்களுக்கும் நன்றி கூறுவதோடு தொடர்ந்தும் அன்றாடம் இவர்களால் வழங்கப்படும் நெறிமுறைகளையும் ஏற்று வாழ்வது அனைவரும் நலமே வாழ உதவும்.

உயிர்கொல்லி நோயாய் உலகெங்கும் பரவியுள்ள கொரோனா வைரசிலிருந்து தப்பி உயிர்வாழக் கையாள வேண்டியவை:

1. சமூக இடைவெளியைக் கடைப்பிடித்தல்
2. முகக் கவசம் அணிதல்
3. கைகளை அடிக்கடி கழுவுதல்
4. தேவையற்று வெளியே செல்வதைத் தவிர்த்தல்
5. அரசின் ஆணையை ஏற்று வீட்டில் இருத்தல்

இந்த ஐந்து நெறிமுறைகளுமே உயிர்களைப் பலிகொள்ளும் கொரானா என்ற கொடிய வைரசை ஒழிக்க உதவும் நடைமுறைகளாகும். இந்த ஐந்து நடைமுறைகளையும் அனைவரும் பின்பற்றி நலமுடன் வாழ்வோம்.

நாமும் நலம்பெற்று, உலகமக்களும் நலமே வாழ, ஆத்மசுத்தியோடு இறைவனைப் பிரார்த்திப்போம். சிவவழிபாட்டிலே நோய் பிணி மற்றும் மரணத்தை வெல்லும் மந்திரமாக மகா ம்ருத்தும்ஜெய மந்திரம் கூறப்பட்டுள்ளது. இறைவனை வழிபடும்பொழுது தினமும் இந்த மந்திரத்தை ஒரு முறையோ அன்றி பலமுறையோ காலை, மாலை வேளைகளில் கூறி, இந்த உலகத்தைப் பீடித்துள்ள நோய் பிணி நீங்கி அனைவரும் நலம்பெற்று வாழ வேண்டும் என்ற வேண்டுதலை முன்வைத்து, இறைவனை வழிபடவேண்டும். நிச்சயம் பலன் கிடைக்கும்.

மகா ம்ருத்தும்ஜெய மந்திரம்

ஓம் த்ரியம்பகம் யஜாமஹே
ஸுகந்திம் புஷ்டி வர்த்தனம்
உர்வாருஹமிவ பந்தனாத்
ம்ருத்யோர் முஷ்ய மாம்ருதாத்'
ஓம் நமச்சிவாய ஓம்நமச்சிவாய ஓம்நமச்சிவாய.

இம்மந்திரத்தை தினமும் ஓதுவதோடுநாமும் நலமடைந்து உலகமக்களும் நலமடைய வேண்டும் என்று பிரார்த்தனை செய்து கொள்ளுங்கள். இவ்வாறான பிரார்த்தனைகளால் பலனும் நலமும் பெற்றவர்கள் பலர்.

இவ்வாறு உருவாக்கப்பட்ட மூன்று தேர்களிலும் ஸ்ரீபத்திரகாளி அம்பாள், விநாயகப்பெருமான், முருகப்பெருமான் ஆகிய மூவரும் 1993 ஆம் ஆண்டு, ஆடிப்பூரத்திற்கு அடுத்தநாள் தேரிலேறிப் பவனி வந்து அடியார்களுக்கு அருட்காட்சி கொடுத்தனர். தேர்த்திருவிழாவைத் தொடர்ந்து, அடுத்தநாள் இந்துசமுத்திரத்திலே தீர்த்தத்திருவிழா நடைபெற்று, புதிய கதிரேசன் மண்டபத்திலே ஸ்ரீபத்திரகாளிஅம்பாளுக்குப் பூசைகள் நடத்தப்பட்டன. 1995 ஆம் ஆண்டு இருபது நாள் இலட்சார்ச்சனையுடன் கௌரிவிரதப்பூசை ஆரம்பிக்கப்பட்டு 21வது நாள் காப்பு வழங்கும் வழக்கமும் இக்கோயிலிலே காணப்படுகின்றது. இவை தவிர வரலட்சுமி விரதம், நவராத்திரி, கந்தச'டி என்பனவும் இங்கு விசேடமாக அனுட்டிக்கப்பட்டு வருகின்றது. 1997 ஆம் ஆண்டு ஸ்ரீ சக்கர மஉறாமேரு யந்திரம் ஆலயத்திலே பிரதிஷ்டை செய்யப்பட்டது.

காலத்திற்குக் காலம் இவ்வாறான பல்வேறு திருப்பணிகள் நடைபெற்றபோதிலும் மீண்டும் 1999 ஆம் ஆண்டு பல்வேறு திருப்பணிகளுக்காக ஆலயம் பாலஸ்தாபனம் செய்யப்பட்டது. பழைய ஆலயம் முழுவதும் இடிக்கப்பட்டு ஒன்றரைக்கோடி ரூபா செலவில் புதிய விமானத்துடன் கூடிய அழகிய ஆலயம் அமைக்கப்பட்டது. கோபுரத்திலே உள்ள கலசங்கள் அத்தனையும், மூலஸ்தானத்துக்குள்ளே உள்ள குடையும் சுத்த வெள்ளியினால் செய்யப்பட்டுள்ளன. அரச மரத்தைச் சுற்றிப் பித்தளைக் கவசங்கள் பதிக்கப்பட்டுள்ளன. இத்திருப்பணிகளின்போது ஏற்கெனவே இருந்த கௌரி அம்பாள் விக்கிரகத்துடன் சந்திரசேகரரின் பஞ்ச உலோக விக்கிரகம் அமைக்கப்பட்டது. அத்தோடு இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட பாணலிங்கத்திற்கும் தனிச்சந்நிதி அமைக்கப்பட்டது. அவ்வாறே சண்டேஸ்வரி உற்சவமூர்த்தியும், வள்ளி தெய்வானை சமேத சுப்பிரமணியப்பெருமானும் ஐந்தடி உயரமான ஆஞ்சநேயரும், புதிதாகச் செய்யப்பட்ட துர்க்கையும் அமைக்கப்பட்டனர். மேலும் பளிங்குக் கற்களால் ஆன சுற்று மதிலும், அம்பாளுக்கான வெள்ளிக் குடையும் அமைக்கப்பட்டு 09-11-2000 ஆம் ஆண்டில் சாமி. விஸ்வநாதக்குருக்கள் தலைமையில் மிகச் சிறப்பாகக் கும்பாபிஷேகம் நடைபெற்றது. கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 48 நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெற்றது. இக்காலத்திலே கல்யாண மண்டபத்திலே பல்வேறு நிகழ்ச்சிகளுடன் கூடிய பக்தி விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. 1988 ஆம் ஆண்டிலிருந்து சிறார்களுக்கான அறநெறிப்பாடசாலையும், பஜனை வகுப்பும். தையல் வகுப்பும், நடனப் பாடசாலையும் அமைக்கப்பட்டன. நான்கு மாடிக் கட்டிடமான இந்து கலாச்சார மண்டபத்திலே கலை, இலக்கியப் பக்தி விழாக்கள் வருடந்தோறும் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. இவ்விழாக்களில் ஈழத்தைச் சேர்ந்தோரும், தமிழகத்தைச் சேர்ந்தோரும் பங்குபற்றி வருகின்றனர். அண்மைக் காலங்களில் இவ்வாலயத்தில் பல்வேறு மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன.




TORONTO ASTROLOGER & PSYCHIC
Pandit: ARJUN
9 TIMES MORE POWERFUL THAN OTHER ASTROLOGERS



VEDIC SOLUTIONS AVAILABLE FOR:
* Health * Education * Family * Job
* Marriage * Divorce * Love * Childless
* Business * Promotion * Husband-Wife Couples
* Lucky Numbers * Court Etc

REMOVES BLACK MAGIC & EVIL SPIRITS & GIVES 100% PROTECTION

No Person in the World is Without Problems. Meet the Pandit once and see your Future Changing for GOLDEN & BRIGHT FUTURE

100% Guarantee
He can perform Devi upasana Lakshmi Pooja Shanthi Pooja (Prayers) and all so protection from enemies and jealousy
PRIVATE & CONFIDENTIAL

கேரளாவிலிருந்து வருகை தந்துள்ள பிரபல ஜோதிட வல்லுனர் பண்டித் **Pandit: Arjun** சாஸ்திரிகள் பல இடங்களுக்குச் சென்று தற்போது கனடா வந்துள்ளார். இவர் கைரேகை, ஜாதகம், முக நாடி ஆகியவை கொண்டு மிகத்துல்லியமாக நடந்தவை, நடக்கவிருப்பவை பற்றிய விபரங்களைக் கூறுவார். இவற்றையெல்லாம் அறிந்து பரிகாரம் செய்து கொள்ள ஒருமுறை இவரைச் சந்தியுங்கள்..!

கண்ணூறு, நாவூறுக்கு வெள்ளிக்கிழமைகளில் இலவசமாக நூல் கட்டப்படும்

- கைரேகை
- நாம சட்சத்திரம்
- கல்வி, உத்தியோகம்
- தொழில், வியாபாரம்
- இலட்சுமி வசீகரம்
- வதிவிடப் பிரச்சனைகள்
- வெளிநாட்டுப் பயணங்கள்
- பெண்பிள்ளைகள் - பெற்றார் பிரச்சனைகள்
- நீதிமன்ற வழக்குகள்
- திருமண யோகம்
- குழந்தைப் பாக்கியம்
- சர்ப்ப தோஷம்
- கர்ப்பதோஷம்
- கஸ்ட - நஸ்டங்கள்
- வாகனப் பொருத்தம்
- ஒன்று கூடுதல்

அகோரா சாமயாாகளடம ஏசனறு மநதரஙகள கறறு ஏகாணட ஓம பரகாஷ

2607 Eglinton Ave East, Scarborough ON, M1K 2S2
UPSTAIRS ERA SUPERMARKET , (BRIMLEY & EGLINTON)
Call: 416-722-9498

- மொன்றியல் வீணைமைந்தன் எழுதுகின்றார்

# #11 சிவாஜியும் தமிழ்ச் சினிமாவும்

தொண்ணூறுகளின் பிற்பகுதியில் கொழும்பு நகரில் நடைபெற்ற பாராட்டு விழாவிற்கு வந்திருந்த நடிகர்திலகம் அவர்களுடனான பத்திரிகையாளர் சந்திப்பின்போது….. "இயக்குனர்கள் எதிர்பார்ப்பதை நடித்துக் காண்பிக்கும் ஆற்றல் உங்களுக்கு எப்படி வந்தது? யாரிடமிருந்து கற்றுக் கொண்டீர்கள்?" என்ற வினாவிற்கு விடை அளித்த சிவாஜி அவர்கள்... " மற்றவர்களைப் பார்த்து நான் நடிக்காமல் என்னை பார்த்து மற்றவர்கள் நடிக்கும் அளவிற்கு எனக்கு உறுதியான பயிற்சியையும் திடமான அஸ்திவாரத்தை வழங்கியவர் எனது குருநாதர் அமரர் சின்ன பொன்னுசாமி படையாட்சி அவர்கள். சிதம்பரத்திற்கு பக்கத்தில் ஒரு சிறு கிராமத்தில் வாழ்ந்தவர். அவருக்குத்தான் எனது முதல் மரியாதை!", என்றார்!.

மேடை நடிப்பையே கேமராவிற்கு முன் நடிப்பதால் திரையில் வெற்றி பெற முடியாது. மேடை நடிப்பு வேறு, திரைப்படத்திற்காக கேமரா முன் நடிப்பது என்பது வேறு. இந்த வேறுபாடுகளை சரியான முறையில் அறிந்து வந்த இயக்குனர் தான் திரையுலக பீமர் என்று அறியப்பட்ட அமரர் எல் வி பிரசாத் அவர்களாவார்..

ஒரு சமயம் (1989ல் ) பொம்மை இதழுக்காக கலைஞாநி கமல்ஹாசன் அவர்கள் நடிகர் திலகத்தை பேட்டி கண்டபோது (சிவாஜி அவர்களின் 50 வது பிறந்தநாள் சிறப்பிதழுக்காக) இயக்குனர் பிரசாத்ஜி அவர்கள் தான் கேமராவிற்கு முன் எப்படி நடிக்க வேண்டும் என்பதை எனக்கு கற்றுக் கொடுத்தவர்.. அவரும் ஒரு டிராமா ஆர்டிஸ்ட் ஆனபடியால்..." ரொம்ப திரும்பாதே ஜெர்க் பண்ணாதே முகத்தை இந்த அளவிற்குத் தான் தூக்கணும் இத்தனை அடி தூரம் போய் இந்த ஆங்கிலில்ல திரும்பனும் போன்ற நுணுக்கங்களை சொல்லித் தந்த திரையுலக குரு எல்.வி பிரசாத்" என நடிகர் திலகம் கூறியிருந்தார்.

இனி இவ்வார இதழில் இடம்பெறப்போகும் நாடகத் - திரை உரையாடல் பற்றி பார்ப்போம்.

1954 இல் வெளிவந்த "இல்லறஜோதி" திரைப்படத்தில் இடம்பெற்ற "அனார்கலி" நாடகத்தின் இறுதிக் காட்சியில் வரும் உரையாடல் புகழ்பெற்றதாகும். தயாரிப்பு நிறுவனம் "மாடர்ன் தியேட்டர்ஸ்" உரையாடல் கலைஞர் மு கருணாநிதி அவர்கள். -இவ்வுரையாடல் பற்றி ஒரு சுவாரசியமான சம்பவம் நினைவு கூரத்தக்கது.

முதலில் மாடர்ன் தியேட்டர்ஸ் நிறுவனம் கவிஞர் கண்ணதாசன் அவர்களை வைத்தே இப்படத்திற்கான கதை வசனம் பாடல்களை எழுதிவித்தது. இச்சம்பவம் பற்றி கவிஞர் என்ன எழுதியுள்ளார் என்பது பற்றி பார்ப்போம்

" 1953இல் நான் முதன்முதலாக கதை வசனம் பாடல் எழுதிய படம் மாடர்ன் தியேட்டர்ஸாரின் "இல்லற ஜோதி" அந்த படத்தில் "அனார்கலி" நாடகத்தையும் (அனார்கலியாக பத்மினி, சலீமாக சிவாஜி அவர்கள் நடித்தார்கள்) சேர்க்க வேண்டும் என்று என்னிடம் சொல்லப்பட்டது.

நான் அந்த நாடகத்தை எழுதிக் கொடுத்துவிட்டு டால்மியாபுரம் வழக்கில் (கல்லக்குடி போராட்டம்) ஒன்றரை ஆண்டுகள் தண்டிக்கப்பட்டு ஜெயிலுக்குப் போய் விட்டேன். அப்போது ஜெயிலில் இருந்து திரும்பி இருந்த என் நண்பர் கலைஞர் கருணாநிதி தானும் ஒரு "அனார்கலி" நாடகத்தை மாடர்ன் தியேட்டர்ஸாருக்கு எழுதிக் கொடுத்திருந்தார். இரண்டு வசனங்களும் கலந்து தான் படமாக்கப்பட்டிருந்தது. அவர், தான் எழுதிய அனார்கலியை தன் பத்திரிகையில் வெளியிட்டார். நான் சிறையில் இருந்து திரும்பியதும் எனது அனார்கலியை எனது "தென்றல்" பத்திரிகையில் வெளியிட்டேன்.

எங்கள் இருவருக்கும் தகராறு இதில்தான் ஆரம்பமாயிற்று. கவியரசு- கலைஞர் இருவரினதும் அனார்கலியை வாசித்த எனக்கும் மூன்றாவது அனார்கலியை எழுதுவதற்கு இரு பெருமகனார் உந்துசக்தியாக விளங்கினார்கள். நானும் எனது கற்பனையில் சிவாஜி அவர்களை மனதில் வைத்து எழுதிய காட்சியும் இங்கு இடம்பெறும் "காதல் ஜோதி" எனும் எனது நாடக சித்திரம் (1999) பல தடவை டொரண்டோ ஊவுடீஊ வானொலியில் ஒலிபரப்பாகி புகழ்பெற்றதாகும். ஊவுடீஊ கலைஞர்கள் பேசி நடித்தது முதலில் கலைஞர் மு கருணாநிதி அவர்கள் சலீமிற்காக எழுதிய இறுதிக் காட்சி இங்கு பிரசுரமாகிறது. மூவரினதும் உரையாடல் சுருக்கப்பட்டுள்ளது. இளவரசன் சலீம் (சிவாஜி) காதலி அனார்கலியின் கல்லறையின் மீது மோதிக்கொண்டு அலறுகிறான்.

"அனார்... அனார்... மறைந்து விட்டாயா! என் மாசற்ற ஜோதி மழையே! பெண்ணின் பெரும் பொருளே! பேரழகின் பிறப்பிடமே! என் கண்ணில் படாமல் உன் கட்டழகு மேனி-யை கல்லறைக்குள் மறைத்து விட்டார்களா மாபாவிகள்!"

சிரித்துச் செழிந்த உன் சிங்கார முகத்தை எரித்துக் கெடுக்க வேண்டாம். என்று கல் கொண்டு மூடினாரோ... கல்லினும்... வலிய மனமுடையோர்! நாடோடியாம் அவள்.. நாடாளவேண்டியவனாம் நான்! என் சுட்டுவிரல் அசைவிற்கு எட்டுத்திக்கும் பணியுமாம்! படைபலம் உண்டாம் எனக்கு! தடை பல கடக்கலாமாம் நான்!

மணிமுடியுண்டு - பணிபுரிய பலர் வருவர்! மந்த மாருதம் வேண்டுமா... அதற்கோர் சோலை! நீந்தி விளையாடவா... அதற்கோர் நீரோடை..! பட்டு விரித்த தரையில் பாதம் பட்டால் நோகுமே என்று கவலைப்பட கணக்கற்றோர்! மொட்டு மல்லிகை நல்லதா! முல்லை நல்லதா! மஞ்சத்தில் பரப்ப என்று யோசிப்பவர் ஆயிரம் பேர்! இவ்வளவும் இருந்தென்ன! இத்தனை சுகமும் கிடைத்தென்ன! சுதந்திரம் இல்லாத எனக்கு இவ்வளவும் இருந்தால் என்ன! இல்லாவிட்டால் தான் என்ன! அரண்மனை ஏன்? ஆடம்பரம் ஏன்? அரச வாழ்வு ஏன்? என் ஆணை கேட்க ஆயிரம் ஆட்கள் ஏன்? அனார்கலி உன்னை அடைய முடியாத பாவிக்கு இத்தனையும் ஏன்? நீ இல்லாத பூமியில் என் அன்பே எனக்கு வாழ்வு ஏன்? (சலீம் சாவை அணைக்கின்றான்)

இதோ முதலில் கவியரசு எழுதிய இறுதிக்காட்சி!



சலீம்: அனார்! அனார்.. ஏமாற்றி விட்டார்களே அனார்! எங்கே போனாய்! அனார் எழுந்து வா! வரமாட்டாயா வர முடியாத வழி அடைபட்டு விட்டதா! சண்டாளர்கள் உன்னை கொன்று விட்டார்களா கண்ணுக்கு அணிகலமே! கட்டவிழா மென் மலரே! சாவை அறிந்தறிந்து சாக்காட்டில் மறைந்தாயோ! அழகே! உயிரே! எங்கே போனாய்? அள்ளிச் சொருகி அழகுபட நடந்து வந்தால் கொள்ளை வனப்பில் உன்கூட வரும் கூந்தலெங்கே! களங்கமில்லா வானத்தில் வளர்ந்து வரும் பிறைபோல கண்ணாடி நெற்றி எங்கே? கோடி உலகத்தை கூட்டி வரும் விழி எங்கே? மூடித் திறந்தால் என் உயிர் எடுத்து மூடிவிடும் சின்ன இமை எங்கே? செம்மாங்கனி வடித்த சிங்கார இதழ் எங்கே? கண்ணாடிக் கன்னம் எங்கே? கற்கண்டு சொல் எங்கே? முல்லைப்படை எங்கே? முத்துச்சிரிப்பெங்கே? அனார் உன் காந்தள் மலர்க்கை அசைவை நான் காண முடியாதா? பூந்தாது வாரிவிடும் பொன் மலரே!காட்டு விலங்குகளின் ராட்சச பார்வை காதலுக்கு சமாதி வைத்துவிட்டதே... அனார் நானும் வருகிறேன்! நீ இன்றி நான் இல்லை நினைப்பின்றி நெஞ்சில்லை! வருகிறேன் அனார்! வருகிறேன்!
(முட்டிமோதி சாய்தல்)

கலைஞரினது கவியரசினதும் தமிழை பருகியதால் நடிகர் திலகத்திற்கு நான் எழுதிய இறுதிக் காட்சி இதோ!

சலீம்: அனார்.. அனார்... என் அன்பே! கண்ணின் கருமணியே! என் விழியின் ஒளியே! உன் பூவிழி முகத்தைச் சிதைத்து விட்டார்களே பாவிகள்! மாசில்லா நிலவே! உன் மந்தகாசப் புன்னகையை எங்கு காண்பேன்! அந்தஸ்து.. அதிகாரம்... ஆடம்பரம்.. அரச போகம்..! இவையெல்லாம் இருந்தென்ன பயன்? என் காதலியை காப்பாற்ற முடியாத கபோதி ஆகி விட்டேனே! போர் முகம் கண்டு புலியென பாய்ந்த என் போர் வாள் கொடுமதி படைத்த புல்லர்களின் கரங்களைத் துண்டாட தவறிவிட்டதே! காதலியே என்னை மன்னித்துவிடு! அனார் !அனார்! அமுத மொழி பேசி என்னை அரவணைத்த ஆரணங்கே இனி எங்கே காண்பேன் உன் திருமுகத்தை! என் வாளின் கூர்மையை மழுங்க செய்த உன் வேல்விழி எங்கே? வீணையின் தந்தியில் விந்தைகள் புரியும் பூ விரல்கள் எங்கே? முத்திரை பதித்து நடனமிடும் சித்திர மயிலே! சொத்தும் சுகமும் சொந்தமும் நீ தானே என்று இறுமாந்திருந்தேனே! வாராது வந்த வானத்து நிலவே! வசந்தத்தின் தென்றலே! மோசம் போனேனே நாசக்காரரின் ஆட்சியிலே! கண்ணே! காதலி! உன் கல்லறைக்குள் என்னையும் அழைத்துக் கொள்! என் காதலியை அரவணைத்த கல்லறையே இதோ நானும் வருகிறேன்!
அனார் அமர ஜோதி ஆகிவிட்ட என் காதல் நிலவே! காந்தர்வ உலகில் நாங்கள் இருவரும் காதல் ஜோதியாக ஒளி வீசுவோம்! என்னையும் உன்னுடன் அடைத்துக் கொள். அனார்... அனார்... இதோ என் உயிர்.. உன்னிடமே வருகிறது! (உயிர் பிரிதல்)

கலைஞர் - கவியரசர் - வீணை மைந்தன் ஆகிய மூவரும் நடிகர் திலகத்தை வைத்து எழுதிய இறுதிக் காட்சியின் சுருக்கமே, நீங்கள் வாசித்து அனுபவித்த தமிழின்பம். வாசியுங்கள்.. நேசியுங்கள்...

சிவாஜி தமிழ் மேலும் விரியும் - -வீணை மைந்தன்.





அம்மா
Amma Pawn Broker
தங்க நகை அடைவு மாடம்

கனேடிய அரசின் அங்கீகாரம் பெற்று முழுக் காப்புறுதி செய்யப்பட்ட முதன்மையான அடைவுச்சேவை



உங்கள் பழைய நகைகளை அதியுயர் பெறுமானத்திற்கு எம்மிடம் விற்றுக்கொள்ளலாம்

1.5% முதல் 2.0% வட்டி மட்டுமே (per month)

416-757-0034
416-994-3861

உங்கள் நகைகளுக்கு அதிகூடிய பெறுமதியையும் மிகக்க குறைந்த வட்டி வீதத்தையும் பெற்றுக்கொள்ள நகரின் மத்தியில் ஒரே நிறுவனம்

எவ்வளவு தொகையானாலும் மிகக் குறைந்த வட்டியுடன் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்

105A - 2425 Eglinton Ave. E, Scarborough
ammapawnbroker@gmail.com
கடைக்குப் பின்புறத்தில் போதிய வாகனத் தரிப்பிடங்கள் உண்டு
Shankar& Co. வுக்கு அருகாமையில்

நம்பிக்கை | நாணயம் | உத்தரவாதம்



Canada VISA கூடிய விரைவில் உங்கள் கைகளில்

இலங்கையிலுள்ள உங்கள் உறவினர்கள் CANADAவிற்கு அழைத்து வர எம்மை நாடுங்கள்

**STUDENT VISA**
ஏற்பாடுகளை இலகுவான முறையில் விரைவில் செய்து தருபவர்கள்.

**TOURIST VISA**
தனியாகவோ, குடும்பத்தினருடனோ உல்லாசமாக வருவதற்கான ஏற்பாடுகளை செய்து தருபவர்கள்.

**VISIT VISA**
பல்வேறு சந்தர்ப்பங்களில் கனடா வருவதற்கான ஏற்பாடுகளை செய்து தருபவர்கள்.

**REFUSED VISA**
உங்கள் மறுக்கப்பட்ட விசாக்கள் எமது தலைசிறந்த சட்டத்தரணிகளால் கூடிய விரைவில் மீண்டும் பெற்றுத்தரப்படும்.

**BUSINESS VISA**
உங்கள் வர்த்தகத்தினை மேலும் பெருக்கும் நோக்கத்துடன் கனடா வருவதற்கான ஏற்பாடுகளை செய்து தருபவர்கள்.



P. Jegan
Director - Flex Institute
+94 777 761 346

10 வருட கால நம்பிக்கையான சேவை

flex Institute
Step Towards a Bright Future

6A, Parakumba Place, Colombo 06, Sri Lanka.
www.flexinstitute.lk Flex Institute
flexinstitute04@gmail.com
Hotline: +94 777-761 346



P. Vijay
Director - Flex Institute
+94 777 555 026

# அன்பின் தொனி - 576

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**ஜெபத்தின் வல்லமை.**

**கர்த்தருடைய நாமத்திற்குரிய மகிமையை அவருக்குச் செலுத்துங்கள்.**

பலவான்களின் புத்திரரே, கர்த்தருக்கு மகிமையையும் வல்லமையையும் செலுத்துங்கள், கர்த்தருக்கே அதைச் செலுத்துங்கள். கர்த்தருடைய நாமத்திற்குரிய மகிமையை அவருக்குச் செலுத்துங்கள், பரிசுத்த அலங்காரத்துடனே கர்த்த ரைத் தொழுதுகொள்ளுங்கள். கர்த்தருடைய சத்தம் தண்ணீர்களின்மேல் தொனிக்கிறது, மகிமையுள்ள தேவன் முழங்குகிறார், கர்த்தர் திரளான தண்ணீர்களின்மேல் இருக்கிறார். கர்த்தருடைய சத்தம் வல்லமையுள்ளது, கர்த்த ருடைய சத்தம் மகத்துவமுள்ளது. கர்த்தருடைய சத்தம் கேதுரு மரங்களை முறிக்கிறது, கர்த்தர் லீபனோனின் கேதுருமரங்களை முறிக்கிறார். அவைகளைக் கன்றுக்குட்டிகளைப் போலவும், லீபனோனையும் சீரியோனையும் காண்டாமிருகக் குட்டிகளைப்போலவும் துள்ளப்பண்ணுகிறார். கர்த்தருடைய சத்தம் அக்கினி ஜுவாலைகளைப் பிளக்கும். கர்த்தருடைய சத்தம் வனாந்தரத்தை அதிரப்பண்ணும், கர்த்தர் காதேஸ் வனாந்தரத்தை அதிரப்பண்ணுகிறார். கர்த்த ருடைய சத்தம் பெண்மான்களை ஈனும்படி செய்து, காடுகளை வெளியாக்கும், அவருடைய ஆலயத்திலுள்ள யாவரும் அவருடைய மகிமையைப் பிரஸ்தாபிக்கிறார்கள். கர்த்தர் ஜலப்பிரவாகத்தின்மேல் உட்கார்ந்திருக்கிறார், கர்த்தர் என்றென்றைக்கும் ராஜாவாக வீற்றிருக்கிறார். கர்த்தர் தமது ஜனத்திற்குப் பெலன்கொடுப்பார், கர்த்தர் தமது ஜனத்திற்குச் சமாதானம் அருளி, அவர்களை ஆசீர்வதிப்பார்.
**- சங்கீதம் 29: 1-11**

**என் தேவனாகிய கர்த்தாவே, உம்மை நோக்கிக் கூப்பிட்டேன்.**

கர்த்தாவே, என் சத்துருக்கள் என்னை மேற்கொண்டு மகிழவொட்டாமல், நீர் என்னைக் கைதூக்கி எடுத்தபடியினால், நான் உம்மைப் போற்றுவேன். என் தேவனாகிய கர்த்தாவே, உம்மை நோக்கிக் கூப்பிட்டேன், என்னை நீர் குணமாக்கினீர். கர்த்தாவே, நீர் என் ஆத்துமாவைப் பாதாளத்திலிருந்து ஏறப்பண்ணி, நான் குழியில் இறங்காதபடி என்னை உயிரோடே காத்தீர். கர்த்தருடைய பரிசுத்தவான்களே, அவரைக் கீர்த்தனம்பண்ணி, அவருடைய பரிசுத்தத்தின் நினைவுகூருதலைக் கொண்டாடுங்கள். அவருடைய கோபம் ஒரு நிமிஷம், அவருடைய தயவோ நீடிய வாழ்வு, சாயங்காலத்தில் அழுகை தங்கும், விடியற்காலத்திலே களிப்புண்டாகும். நான் ஒருக்காலும் அசைக்கப்படுவதில்லையென்று, என் வாழ் விலே சொன்னேன். கர்த்தாவே, உம்முடைய தயவினால் நீர் என் பர்வதத்தைத் திடமாய் நிற்கப்பண்ணியிருந்தீர், உமது முகத்தை நீர் மறைத்துக்கொண்டபோதோ நான் கலங்கினவனானேன் நான் குழியில் இறங்குகையில் என் இரத்தத்தால் என்ன லாபமுண்டு? புழுதி உம்மைத் துதித்து, உமது சத்தியத்தை அறிவிக்குமோ? கர்த்தாவே, நீர் எனக்குச்செவி கொடுத்து என்மேல் இரக்கமாயிரும், கர்த்தாவே, நீர் எனக்குச் சகாயராயிரும் என்று சொல்லி, கர்த்தாவே, உம்மை கூப்பிட்டேன், கர்த்தரை நோக்கிக் கெஞ்சினேன். என் புலம்பலை ஆனந்தக் களிப்பாக மாறப்பண்ணினீர், என் மகிமை அமர்ந்திராமல் உம்மைக் கீர்த்தனம் பண்ணும்படியாக நீர் என் இரட்டைக் களைந்துபோட்டு, மகிழ்ச்சியென்னும் கட்டினால் என்னை இடைகட்டினீர். என் தேவனாகிய கர்த்தாவே, உம்மை என்றென்றைக்கும் துதிப்பேன். **- சங்கீதம் 30: 1-12**

**எனக்கு இரங்கும் கர்த்தாவே, நான் நெருக்கப்படுகிறேன்.**

கர்த்தாவே, உம்மை நம்பியிருக்கிறேன், நான் ஒருக்காலும் வெட்கமடையாதபடி செய்யும், உமது நீதியினிமித்தம் என்னை விடுவியும். உமது செவியை எனக்குச் சாய்த்து, சீக்கிரமாய் என்னைத் தப்புவியும்ஈ நீர் எனக்குப் பலத்ததுருகமும், எனக்கு அடைக்கலமான அரணுமாயிரும். என் கன்மலையும் என் கோட்டையும் நீரே, உமது நாமத்தினிமித்தம் எனக்கு வழிகாட்டி, என்னை நடத்தியருளும். அவர்கள் எனக்கு மறைவாய் வைத்த வலைக்கு என்னை நீங்கலாக்கி விடும், தேவரீரே எனக்கு அரண். உமது கையில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன், சத்தியபரனாகிய கர்த்தாவே, நீர் என்னை மீட்டுக்கொண்டீர். வீண்மாயைகளைப் பற்றிக் கொள்ளுகிறவர்களை நான் வெறுத்து, கர்த்தரையே நம்பியிருக்கிறேன். உமது கிருபையிலே களிகூர்ந்து மகிழுவேன், நீர் என் உபத்திரவத்தைப் பார்த்து, என் ஆத்துமவியாகுலங்களை அறிந்திருக்கிறீர். சத்துருவின் கையில் என்னை ஒப்புக்கொடாமல், என் பாதங்களை விசாலத்திலே நிறுத்தினீர். எனக்கு இரங்கும் கர்த்தாவே, நான் நெருக்கப்படுகிறேன், துக்கத்தினால் என் கண்ணும் என் ஆத்துமாவும் என் வயிறு ங்கூடக் கருகிப்போயிற்று. என் பிராணன் சஞ்சலத்தினாலும், என் வருஷங்கள் தவிப்பினாலும் கழிந்து போயிற்று, என் அக்கிரமத்தினாலே என் பெலன் குறைந்து, என் எலும்புகள் உலர்ந்துபோயிற்று. என் சத்துருக்களாகிய யாவர் நிமித்தமும், நான் என் அயலாருக்கு நிந்தையும், எனக்கு அறிமுகமானவர்களுக்கு அருக்களிப்புமானேன், வீதியிலே என்னை கண்டவர்கள் எனக்கு விலகி ஓடிப்போனார்கள். செத்தவனைப்போல எல்லாராலும் முழுவதும் மறக்கப்பட்டேன், உடைந்த பாத்திரத்தைப்போலானேன். அநேகர் சொல்லும் அவதூறைக்கேட்டேன், எனக்கு விரோதமாக அவர்கள் ஏகமாய் ஆலோசனைபண்ணுகிறதினால் திகில் என்னைச் சூழ்ந்து கொண்டது, என் பிராணனை வாங்கத் தேடுகிறார்கள். நானோ, கர்த்தாவே, உம்மை நம்பியிருக்கிறேன், நீரே என் தேவன் என்று சொன்னேன். என் காலங்கள் உமது கரத்தி லிருக்கிறது, என் சத்துருக்களின் கைக்கும் என்னைத் துன்பப்படுத்துகிறவர்களின் கைக்கும் என்னைத் தப்புவியும். நீர் உமது முகத்தை உமது ஊழியக்காரன்மேல் பிரகாசிக்கப்பண்ணி, உமது கிருபையினாலே என்னை இரட்சியும். கர்த்தாவே, உம்மை நோக்கிக் கூப்பிட்டேன், நான் வெட்கப்பட்டுப் போகாதபடி செய்யும், துன்மார்க்கர் வெட்கப்பட்டுப் பாதாளத்தில் மவுனமாயிருக்கட்டும். நீதிமானுக்கு விரோதமாய்ப் பெருமையோடும் இகழ்ச்சியோடும் கடினமாய்ப் பேசுகிற பொய் உதடுகள் கட்டப்பட்டுப்போவதாக. உமக்குப் பயந்தவர்களுக்கும், மனுபுத்திரருக்கு முன்பாக உம்மை நம்புகிறவர்களுக்கும், நீர் உண்டு பண்ணிவைத்திருக்கிற உம்முடைய நன்மை எவ்வளவு பெரிதாயிருக்கிறது! மனுஷருடைய அகங்காரத் துக்கு அவர்களை உமது சமுகத்தின் மறைவிலே மறைத்து, நாவுகளின் சண்டைக்கு அவர்களை விலக்கி, உமது கூடா ரத்திலே ஒளித்துவைத்துக் காப்பாற்றுகிறீர். கர்த்தர் அரணான நகரத்தில் எனக்குத் தமது கிருபையை அதிசயமாய் விளங்கப்பண்ணினபடியால், அவருக்கு ஸ்தோத்திரம். உம்முடைய கண்களுக்கு முன்பாக இராதபடிக்கு வெட்டுண்டேன் என்று நான் என் மனக்கலக்கத்திலே சொன்னேன், ஆனாலும் நான் உம்மை நோக்கிக் கூப்பிட்டபோது, என் விண்ணப் பங்களின் சத்தத்தைக் கேட்டீர். கர்த்தருடைய பரிசுத்தவான்களே, நீங்களெல்லாரும் அவரில் அன்புகூருங்கள், உண் மையானவனைக் கர்த்தர் தற்காத்து, இடும்புசெய்கிறவனுக்குப் பூரணமாய்ப் பதிலளிப்பார். கர்த்தருக்குக் காத்திருக்கிறவர் களே, நீங்களெல்லாரும் திடமனதாயிருங்கள், அவர் உங்கள் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார். **- சங்கீதம் 31: 1- 24**

*தொடரும்...*




SHIRIDI SAI SCHOOL
OF CANADA
ADMISSIONS
OPEN FOR
I/S KINDERGARTEN TO GRADE 6
TO REGISTER YOUR INTEREST PLEASE CALL
416-298-3030
2701 MARKHAM ROAD, SCARBOROUGH


உங்கள் பணத்தேவைகளுக்கு
குறைந்த வட்டிவீதத்தில் அடைவு பிடிக்கப்படும்
PAWN BROKERING
பழைய பவுண்கள் நியாயமான விலையில்
பெற்றுக்கொள்ளப்படும்
CashPoint
துரித பணமாற்றுச்சேவை
வெளிநாட்டு நாணயங்கள்
வாங்கவும் விற்கவும்.
CashPoint
3852 FINCH AVENUE EAST,. UNIT G30,
SCARBOROUGH, ON, M1T 3T9
TEL: 416-284-7000


Carefirst Family Health Team
Accepting New Patients
புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்
தமிழ் பேசும் வைத்தியர்கள்
ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
நீரிழிவு கல்வி திட்டம்
Ontario
Clinic Location:
Carefirst One-Stop Multi Services Centre
300 Silver Star Blvd., 2/F,Scarborough, ON M1V 0G2
Tel: (416) 502-2029, www.carefirstfht.com
McNicoll
Silver Star
Kennedy
Midland

Life Insurance
Don't think twice
Life Insurance Group Benefits
Critical Illness RRSP / RESP
Disability
Investments
iNFORCE LIFe Financial Services Inc.
RESP Registered Education Saving Plans
40% - 20% Goverment Grant
Plus additional 15-10% on us.
Start Saving Early
Ajanthan (Ajay) Thavayogarajah
Insurance and Investments
Call Ajay: 416.704.8074

TRAFFIC TICKETS! Peter Joseph
Legal Representative / Paralegal
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....

வீடு வாங்க விற்க
Vijay Muthumani
Sales Representative
HomeLife Today Realty Ltd., Brokerage*
*Independently Owned and Operated.
Off: 416-298-3200
Dir 647-963-0705



23rd Years in Publishing
UTHAYAN உதயன்
Tel : 416-752-1524
Fax: 416-752-6703



NEW CLASS STARTING
On 12th October 2019
Income Tax
Bookkeeping
(QuickBooks)
Sree 416.438.3350
Seyon Financial Services

ONLY LOCATION IN GTA
OCEAN ACCOUNTING TAX CONSULTANTS
Accounting Services for Personal and Small Business
1646 VICTORIA PARK AVE., SUITE 1 (BETWEEN LAWRENCE & EGLINTON) TORONTO, ON. M1R 1P7
TEL: 416-285-6900
FAX: 416-285-4877
Email: OATC@oceantax.ca Web: www.oceantax.ca
PARK PLAZA
Personal & Corporate Income Tax Returns
Complete Accounting Services

மொன்றியல் நகரில் உதயன்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பலமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria Montreal, QC H3W 2R9
514-342-4229
514-865-0519



உதயம் 1274 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday September 4, 2020


# நாளை நடைபெறும் கனடாவின் விசாலமான தென்னாசிய உள்ளக வர்த்தக அங்காடியின் திறப்பு விழா

## GRAND OPENING CEREMONY of the Majestic City The Largent South Asian Indoor Shopping Mall in Canada











GRAND OPENING CEREMONY of the Majestic City , the largest South Asian Indoor Shopping Mall will be held on 5th, 6th, and 7th of September - This week-end. The President of this Beautiful Indoor Shopping Mall Mr Lam and the Project Manager, Mr. Krish Sivakolunthu, hosted a Press Meet with Canadian Tamil Media last Tuesday.

கனடாவில் இயங்கத் தொடங்கவுள்ள முதலாவது விசாலமான தென்னாசிய உள்ளக வர்த்தக அங்காடி (மோல்) யின் திறப்பு விழா எதிர் வரும் வார இறுதி நாட்களான நாளை 5, ஞாயிறு 6, திங்கள் 7 ஆகிய நாட்களில் ஸ்காபுறோ நகரில் உள்ள மார்க்கம்-மெக்னிக்கல் சந்திப்பு அருகில் நடைபெறவுள்ளது.

சுமார் 180 வர்த்தக நிலையங்கள் அமைந்துள்ள இந்த உள்ளக அங்காடியின் திறப்புவிழாவை முன்னிட்டு அதன் உரிமையாளரும் மற்றும் திட்ட முகாமையாளரான திரு கிறிஸ் சிவக்கொழுந்து அவர்களும் இணைந்து ஒரு ஊடக சந்திப்பை கடந்த செவ்வாய்கிழமையன்று நடத்தினர்.

மேற்படி தமிழ் பேசும் ஊடகவியலாளர்களுடனான சந்திப்பில் பல நிறுவனங்களின் பிரதம ஆசிரியர்களும் நிருபர்களும் புகைப்படப் பிடிப்பாளர்களும் கலந்து சிறப்பித்தார்கள்.

# பைரவி நுண்கலைக் கூடம் நடத்திய இவ்வருடத்திற்குரிய இசைச்சரால் பாடல் போட்டிகளின் வெற்றியாளர்கள









கனடாவில் வெற்றிகரமாக இயங்கிவரும் பைரவி நுண்கலைக் கூடம் நடத்திய இவ்வருடத்திற்குரிய இசைச்சரால் பாடல் போட்டிகளின் இறுதிச் சுற்றுப்போட்டிகள் கடந்த சனி ஞாயிறு தினங்களில் ஸ்காபுறோ நகரில் உள்ள நிறுவனத்தின் கலையகத்தில் சிறப்பாக நடைபெற்றது.

போட்டிகளின் நடுவர்கள் மற்றும் சிறப்பு விருந்தினர்கள், இசைக் கலைஞர்கள் பெற்றோர்கள் என அனைவரும் சுகாதார நடைமுறைகளைப் பின் பற்றி கலந்து கொண்டனர்.

ஒன்றாரியோ மாகாண அரசின் பாராளுமன்ற உறுப்பினர் விஜேய் தணிகாசலம் மற்றும் உதயன் பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கம் மற்றும் சிலர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு உரையாற்றி போட்டியாளர்களை வாழ்த்திச் சென்றனர். நிறுவனத்தின் ஸ்தாபகர் ஆசிரியர் ஜெயச்சந்திரன் மற்றும் அவரது துணைவியார் ஆகியோர் மாணவ மாணவிகளின் பெற்றோர் சகிதம் போட்டி நிகழ்ச்சிகளை நடத்த காரணமாக விளங்கினார்கள். இரண்டாம் நாள் வெற்றியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

இசைச்சரால் Junior பிரிவின் வெற்றியாளர்கள் பின்வருமாறு-

1. லக்சன் கெங்காதரன்
2.ஜதுஸ்கா மனோகரன்
3. கயல்விழி ஈஸ்வரகுமாரன்

இசைச்சரால் Senior வெற்றியாளர்கள் -

1.நிலக்சா கருணாகரன் 2. தாரகா ஸ்ரீகாந்தன் 3. ஆனந்த் சற்குணராஜா

இங்கே காணப்படும் படங்களி ல் வெற்றியாளர்கள், நடுவர்கள், சிறப்பு விருந்தினர்கள் என அனைத்து தர்ப்பினரும் மகிழ்ச்சியோடு வெற்றியாளர்களை பாராட்டி வாழ்த்துவதைக் காணலாம்.